بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஜித்தா (ஸனாய்யியா) இதழ்: 2, துல்க.்.தா, ஹிஜ்ரி 1425, பக்கங்கள் = 12+4

# நபி வழியில் ஹஜ் மற்றும் உம்ரா

“ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜின் கூலி சுவர்க்கத்தைத்தவிர வேறில்லை” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அத்தகைய பாக்கியவான்களாக நீங்களும் ஆகப்போகின்றீர்கள். அதனை நீங்கள் அடைய வேண்டுமானால் இரண்டு நிபந்தனைகளை, பரிபூரணப்படுத்தியே ஆக வேண்டும். முதலாவது இக்லாஸ் (அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜை நிறைவேற்றுவது) இரண்டாவது நபி (ஸல்) அவர்கள் செய்ததைப் போன்றே ஹஜ்ஜை நிறைவேற்றுவது. ஹஜ்ஜைப்பற்றிய சரியான தெளிவு இல்லாததினால் இன்று பல ஹாஜிகள், ஹஜ் கிரியைகளை தவறான முறையில் செய்கின்றார்கள். நபியவர்கள் செய்த ஹஜ்ஜை சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதினால் இத்தவறுகளை நீக்கலாம் என்ற நன்னோக்கோடு இச்சிறு பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

என்னிடமிருந்து உங்களின் ஹஜ் கடமைகளை எடுத்துக் கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆகவே இதைப்படித்து நபியவர்களின் ஹஜ்ஜைப் போன்றே நீங்களும் செய்யுங்கள். அல்லாஹ் நமது ஹஜ்ஜை ஏற்று “அன்று பிறந்த பாலகனை” போன்றும், ஹஜ்ஜின் கூலியாகிய சுவர்க்கத்தைப் பெற்றவர்களாகவும் நம் தாயகம் திரும்ப வாய்ப்பளிப்பானாக!

## உம்ராச் செய்யும் முறை

உம்ரா செய்வதற்கு முன் குளித்து நறுமணம் பூசிக்கொண்டு இஹ்ராம் உடையை அணிந்த பின் “லப்பைக்க உம்ரத்தன்” என்று உரிய எல்லையிலிருந்து (மீக்காத்திலிருந்து) நிய்யத்து வைத்துக் கொண்டு மக்காவிற்குப் புறப்பட வேண்டும். (இலங்கை, இந்தியாவிலிருந்து வருபவர்களின் எல்லை யலம்லம்) இஹ்ராம் அணியும் எல்லைக்குள் வசிப்பவர்கள் அவர்கள் வசிக்கும் இடத்திலிருந்தே இஹ்ராம் அணிந்து நிய்யத்து வைத்துக் கொள்ள வேண்டும். இஹ்ராம் உடை என்பது ஆண்களுக்கு இரண்டு தைக்கப்படாத துணிகளை அணிவதாகும். ஒரு துணியை உடுத்துக்கொள்வது, மற்ற துணியால் தன் மேனியை போர்த்திக் கொள்வது. பெண்களுக்கு தனி இஹ்ராம் உடை கிடையாது. அவர்கள் தங்களுடைய அங்கங்கள் மறையும் அளவுக்கு இஸ்லாம் அனுமதித்த எந்த ஆடையையும் அணிந்து கொள்ளலாம். மக்கா செல்லும் வரை தல்பியா சொல்லிக் கொண்டு செல்வது சுன்னத்தாகும்.

لَبَّيْكَ أَللهُم لَبَّيْكَ ، لَبَّيْكَ لاَ شَرِيْكَ لَكَ
لَبَّيْكَ، إن الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكُ لاَشَرِيْكَ لَكَ

லைப்பைக், அல்லாஹும்ம லைப்பைக், லப்பைக் லா ஷரீக்க லக்க லப்பைக், இன்னல் ஹம்த வன்னி.்.மத லக வல் முல்க், லா “ரீக்க லக்.

ஹரத்திற்குள் நுழைவதற்கு முன் தல்பியாவை நிறுத்திக் கொண்டு வலது காலை முன் வைத்து பின் வரும் துஆவை ஓத வேண்டும்.

بِسْمِ اللهِ وَالصَلاَةُ وَالسَلاَمُ عَلَى رَسُوْلِ اللهِ
.أَللهُم إفْتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ

பிஸ்மில்லாஹ், வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரசூலில்லாஹ், அல்லாஹும்ம.்.ப்தஹ்லி அப்வாப ரஹ்மத்திக. ஹரத்திற்குள் நுழைந்ததும் முதலில் தவாபை ஆரம்பிக்க வேண்டும். தவாப் என்பது க.்.பத்துல்லாவை ஏழு முறை பரிபூரணமாகச் சுற்றி வருவதற்கு சொல்லப்படும். தவாபுக்கு ஒளு அவசியமாகும். தவாபை ஆரம்பிப்பதற்கு முன் ஆண்கள் தங்களின் வலது தோள் புயத்தை திறந்துவிட வேண்டும். அதாவது மேனியை போர்த்தியிருக்கும் துணியின் நடுப்பகுதியை வலது கக்கத்தின் கீழ் வைத்துக் கொண்டு அத்துணியின் இரு ஓரங்களையும் இடது தோள் மீது போட வேண்டும். அதன் பின் உம்ராவிற்குரிய தவாபை நிறைவேற்றுகின்றேன் என்ற நிய்யத்தோடு ஹஜருல் அஸ்வத் கல் பொருத்தப்பட்டிருக்கும் மூலையிலிருந்து உம்ராவின் தவாபை ஆரம்பிக்க வேண்டும். தவாபை ஆரம்பிக்கும் போது நான்கு முறைகளில் ஒன்றைக் கொண்டு ஆரம்பிக்க வேண்டும்.

1- முடியுமாக இருந்தால் ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடுவது.

2- அதற்கு முடியாவிட்டால் கையினால் ஹஜருல் அஸ்வத் கல்லை தொட்டு கையை முத்தமிடுவது.

3- அதற்கும் முடியாவிட்டால் ஹஜருல் அஸ்வத் கல்லை, தடிபோன்றதால் தொட்டு அதை முத்தமிடுவது.

4- அதற்கும் முடியாவிட்டால் ஹஜருல் அஸ்வத் கல்லுக்கு நேராக நின்று தன் வலது கையை அதன்பக்கம் உயர்த்திக்காட்டி “அல்லாஹுஅக்பர்” என்று சொல்வது. இப்போது கையை முத்தமிடக்கூடாது. இந்நான்கில் முடியுமான ஒன்றைச் செய்துவிட்டு தவாபை ஆரம்பிக்க வேண்டும். ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிட வேண்டுமென்பதற்காக மற்றவர்களை இடித்துக் கொண்டு செல்வதை ஹாஜிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடுவது சுன்னத்தாகும். மற்றவர்களுக்கு தொல்லை கொடுப்பது ஹராமாகும். ஹராத்தைச் செய்து சுன்னத்தை நிறைவேற்ற வேண்டுமா? குறிப்பாக பெண்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும். க.்.பத்துல்லாவோடு சேர்ந்து ஓர் அரைவட்டம் இருக்கின்றது, அதையும் சேர்த்து தவாப் செய்ய வேண்டும், காரணம் அதுவும் க.்.பத்துல்லாவின் எல்லைதான். ருக்னுல் யமானியை, (ஹஜருல் அஸ்வத் கல் மூலைக்கு முன்னுள்ள மூலையை) தொட வாய்ப்புக் கிடைத்தால் தொட்டுக்கொள்ள வேண்டும். அதை முத்தமிடுவதோ அல்லது தொட்டு கையை முத்தமிடுவதோ அல்லது தொட வாய்ப்புக் கிடைக்காத நேரத்தில் அதன் பக்கம் கையை உயர்த்திக் காட்டி அல்லாஹுஅக்பர் என்று கூறுவதோ கூடாது. முந்திய மூன்று சுற்றுக்களிலும் “ரம்ல்” செய்வது சுன்னத்தாகும். “ரம்ல்” என்பது கால் எட்டுக்களை கிட்ட வைத்து வேகமாக நடப்பதற்குச் சொல்லப்படும். மற்ற நான்கு சுற்றுக்களையம் சாதாரணமான நடையில் நடப்பது. “ரம்ல்” செய்வது ஆண்களுக்கு மாத்திரம்தான் சுன்னத்தாகும். பெண்களுக்கல்ல.

ஒவ்வொரு சுற்றுக்களுக்கும் மத்தியில் குறிப்பிட்ட துஆக்கள் எதுவும் இல்லை, விரும்பிய துஆக்களைக் கேட்கலாம். தஸ்பஹ், திக்ர் செய்தல், குர்ஆன் ஓதுதல் போன்றவைகளை, செய்து கொள்ளலாம். ருக்னுல் யமானியிலிருந்து ஹஜருல் அஸ்வத் கல்பொருத்தப்பட்டிருக்கும் மூலை வரையுள்ள இடத்தில்
رَبَنَا آتِنَا فِي الدُنْيَا حَسَنَةً وَفِي الآخِرَةِ حَسَنَةً
'وَقِنَا عَذَابَ النَار' “ரப்பனா ஆத்தினா .்.பித்துன்யா ஹஸனத்தன் வ.்.பில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினா அதாபன்னார்” என்ற துஆவை ஓதுவது சுன்னத்தாகும். ஒவ்வொரு

சுற்றை ஆரம்பிக்கும் போதும் ஹஜருல் அஸ்வத் கல்லுக்கு நேராக வரும்போது தக்பீர் (அல்லாஹுஅக்பர் என்று) கூறுவது சுன்னத்தாகும். தவாப் செய்து முடிந்ததும் திறந்த வலது தோள்புயத்தை மூடிக்கொள்ள வேண்டும். பின்பு மகாமுல் இப்ராஹிமுக்குப் பின் சென்று தவாபுடைய சுன்னத் இரு ரக்அத்துகளை தொழ வேண்டும். முந்திய ரக்அத்தில் சூரத்துல் பாத்திஹாவுக்குப்பின் சூரத்துல் கா∴பிரூனும் (குல்யாஅய்யுஹல் கா∴பிரூன்) இரண்டாவது ரக்அத்தில் சூரத்துல் பாத்திஹாவுக்குப்பின் சூரத்துல் இக்லாஸையும் (குல்ஹுவல்லாஹுஅஹது) ஓதுவது சுன்னத்தாகும். முகாமுல் இபுறாஹிமுக்குப்பின் இட நெருக்கடியாக இருந்தால் கிடைக்கும் இடத்தில் தொழுதுகொள்ளலாம்.

**ஸ∴யி**

ஸ∴யி என்பது ஸ∴பா மர்வா மலைகளுக்கு மத்தியில் ஏழு சுற்றுக்கள் சுற்றுவதாகும். தவாப் முடிந்த பின் ஸ∴யி செய்வதற்காக ஸ∴பா மலைக்குச் செல்லவேண்டும். ஸ∴பா மலையடிவாரத்தை அடைந்ததும்

إن الصــفَا وَالْمَــرْوَةَ مِــنْ شَــعائِر اللهِ என்னும் ஆயத்தை நபி (ஸல்) அவர்கள் ஓதிவிட்டு அல்லாஹ் எதைக்கொண்டு ஆரம்பித்தானோ அதைக் கொண்டு நாமும் ஆரம்பிப்போம் என்று சொல்லி ஸ∴பா மலை மீது க∴பத்துல்லாவை பார்க்கும் அளவுக்கு ஏறி கிப்லாவை முன்னோக்கி அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி பெருமைப்படுத்தி அவனைப்புகழ்ந்து

لاإلَـــهَ إلا اللهُ وَحْـــدَهُ لاَشَـــرِيْكَ لَـــهُ، لَـــهُ الْمُلْـــكُ وَلَـــهُ الْحَمْـــدُ يُحْيِـــيْ وَيُمِيْـــتُ وَهُـــوَ عَلَـــى كُـــل شَـــيْءٍ قَـــدِيْر. لاإلَـــــهَ إلا اللهُ وَحْـــدَهُ، أَنْجَـــزَ وَعْـــدَهُ، وَنَصَـــرَ عَبْـــدَهُ، وَأَعَـــز جُنْـــدَهُ، وَهَـــزَمَ الأَحْـــزَابَ وَحْـــدَهُ

லாஇலாஹா இல்லல்லாஹுவஹ்தஹுலா“ரீக்க லஹ், லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவ அலா குல்லி ஷை“ய்யின் கதீர். லாஇலாஹா இல்லல்லாஹுவஹ்தஹ், அன்ஜஸ வ∴தஹ், வநஸர அப்தஹ், வஅஅஸ்ஸ ஜுன்தஹ், வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹ்.

என்னும் திக்ருகளை ஓதி இடையே துஆக்களும் செய்தார்கள். இப்படி மூன்று தடவைகள் செய்தார்கள். (அபூதாவூத், நஸாயி, இப்னுமாஜா, தாரமி, தப்ரானி)

இந்த திக்ருகளை நாமும் ஓதி இவைகளுக்கு இடையே நமக்காக துஆக்கள் செய்வதும் சுன்னத்தாகும். இன்று சிலர் தொழுகைக்குத் தக்பீர் கூறுவது போல் இரு கைகளையும் க∴பத்துல்லாவின் பக்கம் உயர்த்திக் காட்டிவிட்டுச் செல்கின்றார்கள். இது சுன்னத்தான முறையல்ல. துஆவுக்கு மாத்திரமே கையை உயர்த்த வேண்டும். பின்பு ஸ∴பா மலையிலிருந்து இறங்கி மர்வாவை முன்னோக்கிச் செல்ல வேண்டும், முதல் பச்சை விளக்கு பொருத்தப்பட்ட இடத்திலிருந்து மறு பச்சை விளக்கு பொருத்தப்பட்ட இடம் வரைக்கும் சிறிது வேகமாக ஓட வேண்டும். அதன்பிறகு சாதாரணமாக நடக்க வேண்டும். இப்படி வேகமாக ஓடுவது ஆண்களுக்கு மட்டும்தான் பெண்களுக்கல்ல. மர்வா மலையை அடைந்ததும் அதன்மீது ஏறி கிப்லாவை முன்னோக்கி ஸ∴பா மலையில் செய்தது போன்றே செய்வது சுன்னத்தாகும். இத்தோடு ஒரு சுற்று முடிவுறுகின்றது. பின்பு மர்வாவிலிருந்து ஸ∴பா வரைக்கும் செல்வது, இங்கும் இரு பச்சை விளக்குகளுக்கு மத்தியில் சற்று வேகமாக ஓடுவது சுன்னத்தாகும். ஸ∴பா மலையை அடைந்தால் இரண்டாவது சுற்று முடிவுறுகிறது. இப்படி ஏழு சுற்றுக்கள் சுற்ற வேண்டும், மர்வாவில்தான் கடைசிச் சுற்று முடிவுறும். ஒவ்வொரு சுற்றுக்கும் இடையில் தனிப்பட்ட பிரார்த்தனைகள் இல்லை. விரும்பிய பிரார்த்தனைகள், திக்ருகள், குர்ஆன் போன்றவைகளை ஓதலாம். இப்படிப்பட்ட சிறப்பான இடங்களில் மனமுருக அல்லாஹ்விடத்தில் பிரார்த்தியுங்கள். தவாப் மற்றும் ஸ∴யை கீழே செய்யமுடியா விட்டால் மேல்மாடியில் செய்து கொள்ளலாம். ஸ∴யின் ஏழு சுற்றுக்களும் முடிவடைந்தபின் ஆண்கள் மொட்டை அடித்துக் கொள்ள வேண்டும், இதுவே சிறந்த முறையாகும். மொட்டை அடிக்காதவர்கள் முடியை குறைத்துக் கொள்ள வேண்டும். முடியை குறைத்துக் கொள்வதென்பது இரண்டு அல்லது மூன்று இடங்களில் சில முடிகளை மட்டுமே கத்தரிப்பது என்பதல்ல, மாறாக தலையில் உள்ள எல்லா முடிகளும் கொஞ்ச அளவுக்காவது கத்தரிக்கப்பட வேண்டும், இதுவே நபிவழியாகும். பெண்கள் தங்களின் தலைமுடியின் நுனியில் விரல் நுனியளவுக்கு வெட்டிக் கொள்ள வேண்டும், இதுவே அவர்களுக்கு சுன்னத்தான முறையாகும், இத்துடன் உம்ராவின் செயல்கள் பரிபூரணமடைந்துவிட்டன. அல்லாஹ் நமது உம்ராவையும் மற்ற அமல்களையும் ஏற்றுக் கொள்வானாக.

குறிப்பு:- தவா∴பிலும் ஸ∴யிலும் ஏழு சுற்றுக்களையும் ஒரே நேரத்தில் சுற்ற முடியாதவர்கள் இடையில் களைப்பாறிவிட்டு பின்பு மீதமுள்ள சுற்றுக்களைத் தொடருவதில் தவறில்லை.

**ஹஜ் செய்யும் முறை**

ஹஜ்ஜின் வகைகள் மூன்று

1. ஹஜ்ஜுத்தமத்து∴ 2. ஹஜ்ஜுல் கிரான் 3. ஹஜ்ஜுல் இ∴ப்ராத்

**ஹஜ்ஜுத் தமத்து∴**

ஹஜ்ஜுடைய மாதத்தில் (“வ்வால், துல்க∴தா, துலஹஜ்) ஹஜ்ஜுக்கான உம்ராவைச் செய்து அதே வருடத்தில் ஹஜ்ஜையும் செய்வதற்குச் சொல்லப்படும். ஹஜ்ஜுக்குச் செல்லும்போது குர்பானி கொடுக்கும் பிராணியை, தன்னுடன் கூட்டிக் கொண்டு செல்லாதவர்களுக்கு இதுவே சிறந்த முறையாகும். ஹஜ்ஜுத்தமத்து∴ செய்பவர் உம்ராவை முடித்துவிட்டால், ஹஜ்ஜுக்காக நிய்யத் வைக்கும் வரை, இஹ்ராமினால் ஹராமாக்கப்பட்டிருந்த அனைத்தும் ஹலாலாகிவிடும், துல்ஹஜ் 8ஆம் நாள் காலையில் தங்கியிருக்கும் இடத்தில் இருந்தே ஹஜ்ஜுக்கு நிய்யத் வைத்துக் கொண்டு இஹ்ராமை அணிந்து மினாவிற்குச் செல்ல வேண்டும்.

ஹஜ்ஜுல் கிரான் :-

ஹஜ்ஜுடைய மாதத்தில் ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்கும் சேர்த்து ஒரே நிய்யத்து வைப்பது. யார் தன்னுடன் குர்பானிக்குரிய பிராணியை, கொண்டு செல்கின்றார்களோ அவர்களுக்கு இதுவே சிறந்த முறையாகும். இந்த முறையில்தான் நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுசெய்தார்கள்.

**ஹஜ்ஜுல் இ∴ப்ராத்**

ஹஜ்ஜுடைய மாதத்தில் ஹஜ்ஜுக்கு மட்டும் நிய்யத்து வைப்பது, கிரான் மற்றும் இ∴ப்ராத் முறைகளில் ஹஜ் செய்பவர்கள் மக்கா வந்ததும் தவாப் செய்ய வேண்டும். இதற்கு தவாபுல் குதூம் என்று சொல்லப்படும். தவாபுல் குதூமுக்குப் பின் ஸ∴யி செய்பவர்கள் 10ம் நாள் தவாபுல் இ∴பாலாவுக்குப் பின் ஸ∴யி செய்யத்தேவையில்லை. இப்போது ஸ∴யி செய்யாதவர்கள் தவாபுல் இ∴பாலாவக்குப்பின் ஸ∴யி செய்தே ஆகவேண்டும்.

**துல்ஹஜ் பிறை 8ம் நாள்**

மேலே கூறப்பட்ட மூன்று முறைகளில் ஹஜ் செய்பவர்களும் துல்ஹஜ் பிறை எட்டாம் நாள் மினாவிற்குச் செல்ல வேண்டும். மினாவில் லுஹர், அஸர், ம∴ரிப், இ“ா, ஸுப்ஹுத் தொழுகைகளை உரிய நேரத்தில் தொழ வேண்டும். நான்கு ரக்அத்துத் தொழுகைகளை இரண்டாக சுருக்கித் தொழவேண்டும். இப்படித்தான் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் தொழுதார்கள்.

துல்ஹஜ் பிறை 9ம் நாள்

துல்ஹஜ் பிறை ஒன்பதாம் நாள் சூரியன் உதித்தபின் அர∴பா செல்ல வேண்டும். அர∴பா சென்றதும் அர∴பா எல்லையை உறுதிப் படுத்தியபின் ம∴ரிப் தொழுகையின் நேரம் வரும் வரை அங்கேயே தங்கி இருப்பது அவசியமாகும். லுஹருடைய நேரம் வந்ததும் பாங்கும், இகாமத்தும் கூறி லுஹரை இரண்டு ரக்அத்தாக சுருக்கித் தொழ வேண்டும். லுஹர் தொழுகை

முடிந்ததும் இகாமத் கூறி அஸா் தொழுகையையும் இரண்டு ரக்அத்தாக சுருக்கி லுஹருடன் முற்படுத்தித் தொழ வேண்டும். முன் பின் சுன்னத்துக்கள் இல்லை. தொழுகை முடிந்ததும் ஓர் இடத்தில் அமர்ந்து வணக்கத்தில் ஈடுபடவேண்டும். அரஃபாவுடைய தினம் மிக, சிறப்பான தினமாகும். ஹஜ் என்றால் அரஃபாவில் தங்குவதுதான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹாஜிகளின் இத்தியாகத்தைப் பார்த்து மலக்குகளிடம் அல்லாஹ் பெருமைப்படும் நாளாகும். ஆகவே, அங்குமிங்கும் அலைந்து திரியாமல் உருக்கமான முறையில் உங்களின் ஈருலக வெற்றிக்காகவும், உலக முஸ்லிம்களுக்காகவும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுங்கள். அந்நாளில் செய்யும் வணக்கங்களில் மிக மேலானது துஆச் செய்வதாகும்.

நபி (ஸல்) வஸல்லம் அவர்கள் (தொழுகையை முடித்து விட்டு,) அரஃபா மலையடிவாரத்தில் நின்றவர்களாக, கிப்லாவை முன்னோக்கி சூரியன் மறையும் வரை துஆச்செய்தார்கள். (முஸ்லிம்)

அந்நாளில் செய்யும் திக்ருகளில் மிகச் சிறந்தது பின்வரும் திக்ராகும். நானும் எனக்கு முன்வந்த நபிமார்களும் கூறியவையில் மிகச் சிறந்தது

لا اِلَــهَ إلا الله وَحْــدَهُ لاَشَــرِيْكَ لَــهُ ، لَــهُ الْمُلْــكُ وَلَــهُ الْحَمْــدُ وَهُــوَ عَلَــى كُــل شَــيْءٍ قَــدِيْرٍ

லாஇலாஹா இல்லல்லாஹுவஹ்தஹுலா“ரீக்க லஹ், லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷை“ய்யின் கதீர். என நபி (ஸல்) வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அரஃபாவுடைய எல்லைக்குள் எங்கும் தங்கிஇருக்கலாம். ஜபலுர் ரஹ்மாவிற்க்குப் போய் அங்கிருந்து பிரார்த்தனை செய்யவேண்டும் என்று நினைத்து, பல சிரமங்களுக்கு மத்தியில் அங்கு சென்று அன்றைய நாளையே வீணாக்கிவிடாமல் கிடைத்த இடத்தில் அமர்ந்து, ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் முடியுமான அமல்களைச் செய்யுங்கள். நபி (ஸல்) அவர்கள் ஜபலுர்ரஹ்மா மலைமீது ஏறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. “நான் இந்த இடத்தில்தான் தங்கினேன், அரஃபாவின் எல்லைக்குள் எங்கும் தங்கலாம்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (அபூதாவூத், அஹ்மத்)

நபி (ஸல்) அவர்களே அரஃபாவின் எல்லைக்குள் எங்கு தங்கினாலும் ஒரே நன்மைதான் என்று சொல்லியிருக்கும் போது எதற்காக ஜபலுர்ரஹ்மாவிற்குச் செல்ல வேண்டும்? ஹாஜிகள் இதை கவனத்தில் கொள்வது அவசியம்.

**குறிப்பு** : யார் அரஃபா எல்லைக்கு வெளியில் தங்கி இருக்கின்றாரோ அவருடைய ஹஜ்ஜு ஏற்கப்படாது, இன்னும் அரஃபா தினத்தன்று ஹாஜிகள் நோன்பு நோற்கக்கூடாது.

**முஸ்தலிஃபாவில் இரவில் தங்குவது**

ஒன்பதாம் நாளின் சூரியன் மறைந்ததும் தல்பியா கூறியவர்களாக அமைதியான முறையில் முஸ்தலிஃபா செல்ல வேண்டும். முஸ்தலிஃபா சென்றதும் ஓர் பாங்கு இரண்டு இகாமத்தில் மக்ரிபையும் இ“ாவையும் சேர்த்து இஷாவை இரண்டு ரகஅத்தாக சுருக்கித் தொழ வேண்டும். முன் பின் சுன்னத்துக்கள் இல்லை. சுப்ஹுவரை அங்கு தங்குவது அவசியமாகும். முஸ்தலிஃபாவிற்குள் எங்கும் தங்கலாம்.

நான் இங்குதான் தங்கினேன், முஸ்தலிஃபாவிற்குள் எங்கும் தங்கலாம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்) நோயாளிகள், பெண்கள் நடு இரவுக்குப்பின் அவர்கள் விரும்பினால் மினா செல்லலாம். நபி (ஸல்) அவர்கள் இதை அனுமதித்துள்ளார்கள்.

சுபஹுடைய நேரம் வந்ததும் சுபஹுத் தொழுகையை தொழுதுவிட்டு சூரியனின் மஞ்சள் நிறம் வரும் வரை அல்லாஹ்வை, போற்றிப்புகழ்ந்து அவனைப் பெருமைப்படுத்தக்கூடிய திக்ருகளைக் கூறுவதும் கிப்லாவை முன்னோக்கி துஆச் செய்வதும் சுன்னத்தாகும்.

நபி (ஸல்) அவர்கள் ம“அருல் ஹராம் என்னும் மலைமீது ஏறி கிப்லாவை முன்னோக்கி நின்று சூரியனின் மஞ்சள் நிறம் வரும் வரை நின்ற நிலையில் பிரார்த்தனை செய்தார்கள்.(அபூதாவூத்)

இன்னும் ஓர் அறிவிவப்பில்:-

அல்லாஹ்வைப் போற்றிப்புகழ்ந்து அல்லாஹுவைப் பெருமைப்படுத்தி, ஒருமைப்படுத்தும் திக்ருகளை ஓதினார்கள்.

**துல் ஹஜ் பிறை 10ம் நாள்**

சூரியன் உதயமாகுவதற்கு முன் முஸ்தலிஃபாவிலிருந்து புறப்பட்டு தல்பியா கூறியவர்களாக மினா வர வேண்டும். 10ம் நாள் மினாவில் செய்யும் நான்கு அமல்கள்.

1- ஜம்ரத்துல் அகபாவிற்கு மாத்திரம் ஏழு கற்களை வீசுவது.
2- குர்பானி கொடுப்பது.
3- முடி எடுப்பது.
4- தவாபுல் இஃபாலா செய்வது.

சொல்லப்பட்ட வரிசைப்பிரகாரம் செய்வதே சுன்னத்தாகும். ஒன்றைவிட மற்றொன்றை முற்படுத்தியோ பிற்படுத்தியோ செய்தாலும் தவறில்லை. பத்தாம் நாள் நபி (ஸல்) அவர்களிடம் பல ஸஹாபாக்கள் வந்து ஒன்றை முற்படுத்தி செய்துவிட்டேன் அல்லாஹ்வின் தூதரே என்று கேட்கும் போதெல்லாம் பரவாயில்லை என்றே நபி (ஸல்) அவர்கள் விடையளித்தார்கள்.

**கல் எறிவது**

பத்தாம் நாள் எறியும் கற்களை காலை சூரிய உதயத்திலிருந்து ளுஹர் நேரத்துக்குள் எறிய வேண்டும். இந்த நேரத்திற்குள் எறிய முடியாதவர்கள் இதற்குப் பின்னும் எறியலாம்.

பத்தாம் நாள் ஒரு நபித்தோழர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! மாலையான பின்புதான் நான் கல் எறிந்தேன் என்றார், பரவாயில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி) எறியும் கல்லின் அளவு சுண்டுவிரலால் வீசும் கல் அளவிற்கு இருக்க வேண்டும். அதை ஒவ்வவொரு கற்களாக “அல்லாஹுஅக்பர்” என்று சொல்லிக் கொண்டு எறிய வேண்டும். ஏழு கற்களையும் ஒரே தடவையில் எறியக்கூடாது. “சுண்டு விரலால் வீசக்கூடிய கற்களைப் போன்று ஏழு கற்களை நபி (ஸல்) அவர்கள் வீசினார்கள். ஒவ்வொரு கற்களை வீசும் போதும் தக்பீர் கூறினார்கள்” என ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (அபூதாவூத், பைஹகி)

கல் எறிவதற்கு முடியாத நோயாளி மற்றும் பலவீனர்களின் கல்லை இன்னும் ஒருவர் அவருக்குப் பகரமாக எறியலாம். ஏறியக்கூடியவர் அவ்வருடம் ஹஜ்ஜு செய்யக்கூடியவராக இருக்க வேண்டும். அவருடைய கல்லை எறிந்த பின்புதான் மற்றவரின் கல்லை எறிய வேண்டும். தனக்கு கல் எறிய சக்தி இருக்கும் போது பிறரை எறியச் சொல்லக்கூடாது.

**குர்பானி கொடுப்பது**

தமத்துஃ மற்றும் கிரான் முறைப்பிரகாரம் ஹஜ் செய்பவர்கள் கல் எறிந்ததற்குப் பிறகு குர்பானி கொடுக்க வேண்டும். அதாவது ஒட்டகம், மாடு, ஆடு இவைகளில் ஒன்றை அல்லாஹ்வுக்காக அறுப்பது. ஏழு பேர் சேர்ந்து ஓர் ஒட்டகத்தை அல்லது ஒரு மாட்டை அறுக்கலாம். ஆடு கொடுப்பதாக இருந்தால் ஒருவருக்கு ஒன்று வீதம் கொடுக்க வேண்டும். இஃப்ராது முறையில் ஹஜ் செய்தவருக்கு குர்பானி கொடுக்க வேண்டிய அவசியமில்லை. குர்பானியை மினாவிலும், மக்காவின் எல்லைக்குள் எங்கும் அறுக்கலாம், ஆனால் ஹரம் எல்லைக்கு வெளியில் அறுக்கக்கூடாது. “நான் இந்த இடத்தில்தான் குர்பானி கொடுத்தேன். மினாவில் எங்கும் குர்பானி கொடுக்கலாம். மக்காவின் தெருக்கள் எல்லாம் நடக்கும் பாதையும் குர்பானி கொடுக்கும் இடமுமாகும்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத் ,அபூதாவூத்)

குர்பானி இறைச்சியிலிருந்து அதைக் கொடுத்தவரும் உண்ணலாம்.

குர்பானி கொடுக்கும் இறைச்சியிலிருந்து மினாவுடைய மூன்று நாட்களை (பிறை 11,12,13) தவிர (வேறு நாட்களில்) நாங்கள்

உண்ணாமலிருந்தோம். நீங்களும் (அந்த இறைச்சியைச்) சாப்பிட்டு, சேமித்தும் வைத்துக் கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு அனுமதித்த போது நாங்களும் சாப்பிட்டோம், சேமித்தும் வைத்தோம். மதீனாவிற்கும் அவ்விறைச்சியை கொண்டு செல்லும் அளவு எங்களிடம் இருந்தது என ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (அஹ்மத்)

குர்பானி கொடுப்பதற்கு வசதியற்றவர் ஹஜ்ஜுடைய நாட்களில் மூன்று நோன்புகளும், ஊர் திரும்பிய பின் ஏழு நோன்புகளும் நோற்க வேண்டும்.

**தலை முடி எடுப்பது**

குர்பானி கொடுத்த பின் தலை முடியை எடுக்க வேண்டும். (முடி எடுக்கும் முறை முன்னால் சொல்லப்பட்டுவிட்டது) முடியை எடுத்ததும் இஹ்ராமிலிருந்து நீங்கிக் கொள்ளலாம். அதாவது கணவன் மனைவி தொடர்பைத்தவிர இஹ்ராத்தினால் தடுக்கப்பட்டிருந்தவைகள் எல்லாம் ஆகுமாகிவிடும். தவாபுல் இ∴பாலாவைச் (ஹஜ்ஜுடைய தவாபை) செய்துவிட்டால் கணவன் மனைவி உறவும் ஆகுமாகிவிடும்.

**தவாபுல் இபாலா**

தலை முடி எடுத்த பின் குளித்து மணம்பூசி தனது வழமையான ஆடையை அணிந்து கொண்டு தவாபுல் இ∴பாலா செய்வதற்காக மக்கா செல்ல வேண்டும். தமத்துஆன முறையில் ஹஜ் செய்பவர்கள் தவாபுல் இ∴பாலாவை முடித்துவிட்டு ஹஜ்ஜுக்கான ச∴யும் செய்ய வேண்டும். கிரான் மற்றும் இ∴ப்ராதான முறையில் ஹஜ் செய்பவர்கள் மக்கா வந்தவுடன் செய்த தவாபுல் குதூமுக்குப் பின் ச∴யி செய்திருந்தால் இப்போது தவாபுல் இ∴பாலா மாத்திரம் செய்தால் போதும், ச∴யி செய்யத் தேவையில்லை. தவாபுல் குதூமுக்குப் பின் ச∴யி செய்யவில்லையென்றால் இப்போது (தவாபுல் இ∴பாலாவுக்குப் பின்) ச∴யி செய்தே ஆக வேண்டும். தவாப் மற்றும் ச∴யை முடித்ததும் மினா சென்று 11ம் இரவில் மினாவில் தங்குவது அவசியமாகும்.

**துல் ஹஜ் பிறை 11ம் நாள்**

11ம் நாள் ளுஹருடைய நேரம் வந்ததிலிருந்து சூரியன் மறைவதற்கு முன் மூன்று ஜம்ராக்களுக்கும் முறையே ஏழு கற்கள் வீதம் எறிய வேண்டும். முதலில் சிறிய ஜம்ராவிற்கும், இரண்டாவது நடு ஜம்ராவிற்கும், மூன்றாவது பெரிய ஜம்ராவிற்கும் எறிய வேண்டும். முதலாவது ஜம்ராவிற்கு கல் எறிந்த பின் வலது பக்கம் சற்று முன்னால் சென்று கிப்லாவை முன்னோக்கி துஆச் செய்வது சுன்னத்தாகும். இரண்டாவது ஜம்ராவிற்கு கல் எறிந்த பின் இடது பக்கம் சற்று முன்னால் சென்று கிப்லாவை முன்னோக்கி துஆச் செய்வது சுன்னத்தாகும். மூன்றாவது ஜம்ராவிற்க்குப்பின் துஆச் செய்வது சுன்னத்தல்ல.

துல் ஹஜ் பிறை 12ம் நாள்

12ம் இரவும் மினாவில் தங்குவது அவசியமாகும். 12ம் நாளும் 11ம் நாளைப் போன்றே மூன்று ஜம்ராக்களுக்கும் ளுஹர் தொழுகையின் நேரத்திற்குப் பின் கல் எறிய வேண்டும். 12ம் நாளோடு ஹஜ்ஜுக் கடமையை முடித்துவிட்டுச் செல்ல விரும்புபவர்கள் சூரியன் மறைவதற்கு முன் மினா எல்லையை விட்டும் வெளியாகிவிட வேண்டும். 13ம் நாளும் மினாவில் தங்க விரும்புபவர்கள் 13ம் இரவும் மினாவில் தங்கிவிட்டு 13ம் நாள் ளுஹர் நேரத்திற்க்குப் பின் மூன்று ஜம்ராக்களுக்கும் கல் எறிந்துவிட்டு மக்கா செல்ல வேண்டும். 10,11,12,13ம் நாட்களில் மினாவில் ஒவ்வொரு தொழுகையையும் உரிய நேரத்தில் தொழ வேண்டும். நான்கு ரக்அத்துத் தொழுகைகளை இரண்டு ரக்அத்துக்களாக, சுருக்கித் தொழ வேண்டும். மாதவிடாய் மற்றும் பிரசவத் தீட்டு ஏற்பட்ட பெண்கள் தவாப் மற்றும் தொழுகையைத்தவிர ஹஜ்ஜுடைய மற்ற எல்லா அமல்களையும் செய்யலாம். சுத்தமானதும் விடுபட்ட தவாபை நிறைவேற்ற வேண்டும்.

**தவாபுல் விதா**

ஹஜ் கடமையை முடித்துவிட்டு தன்வீடு செல்ல விரும்புபவர்கள் கடைசியாகச் செய்யும் அமல் தவாபுல் விதாவாகும். தவாபுல் விதா என்பது க∴பத்துல்லாவிலிருந்து விடை பெற்றுச் செல்லும் தவாபாகும். அதுவே ஹஜ் செய்பவரின் கடைசி அமலாகும். தவாபுல் இ∴பாலாவை முடித்த ஒரு பெண் மாதவிடாய் மற்றும் பிரசவ இரத்தத்தின் காரணமாக தவாபுல் விதாவைச் செய்ய முடியாவிட்டால் அப்பெண்ணிற்கு மாத்திரம் தவாபுல் விதாவை விடுவதற்கு அனுமதி உண்டு. மற்ற எல்லா ஹாஜிகளும் அதை நிறைவேற்றுவது அவசியமாகும். மக்காவிலுள்ள எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு கடைசியாக தவாபுல் விதாவைச் செய்ய வேண்டும். தவாபுல் விதா முடிந்ததும் பயணத்தைத் தொடங்க வேண்டும். இத்துடன் ஹஜ் கடமை முடிவடைகின்றது. சிலர் தவாபுல் விதாவை செய்து விட்டு கல் எறிகின்றார்கள். இது முற்றிலும் தவறாகும். அவர் மீண்டும் தவாபுல் விதா செய்ய வேண்டும். இன்னும் சிலர் தவாபுல் விதாவை முடித்துவிட்டுச் செல்லும் போது க∴பாவை பார்த்துக் கொண்டே பின்னோக்கி வருகின்றார்கள், இதுவும் தவறாகும். அல்லாஹ் நம் அனைவரின் ஹஜ் கடமைகளையும் ஏற்று அன்று பிறந்த பாலகனைப் போன்று தன் தாயகம் திரும்ப நம் அனைவருக்கும் வாய்ப்பளிப்பானாக!

**இஹ்ராம் அணிந்தவர் தவிர்க்க வேண்டியவைகள்**

1-உடலிலுள்ள முடியையோ, நகங்களையோ எடுப்பது. 2-உடல், ஆடைகள், உணவு, குடிபானம் ஆகியவைகளில் மணம் பூசுவது. 3-பூமியிலுள்ள உயிர்ப்பிராணிகளைக் கொல்வது அல்லது வேட்டையாடுவது, விரட்டுவது. 4-இஹ்ராமிலும், இஹ்ராமில்லாத நிலையிலும் ஹரமின் எல்லைக்குள் உள்ள மரம் செடிகளை வெட்டுவது. 5-தவறி விடப்பட்ட பொருட்களை எடுப்பது. ஆனால் உரியவர்களிடம் கொடுக்க முடியுமாக இருந்தால் மட்டும் எடுக்கலாம். 6-இஹ்ராம் அணிந்தவர் திருமணம் செய்யவோ, அல்லது முடித்து கொடுக்கவோ, தனக்கோ அல்லது பிறருக்கோ திருமணம் பேசவோ கூடாது. இன்னும் பெண்ணுடன் உடலுறவு கொள்வது, காம உணர்வோடு கலந்துரையாடுவதும் கூடாது.

ஹஜ்ஜுடைய நேரத்தில் உடலுறவு கொண்டால் அந்த ஹஜ்ஜு சேராது. அதற்கு பரிகாரமாக ஓர் குர்பானி கொடுப்பதுடன் அடுத்த வருடம் மீண்டும் ஹஜ்ஜு செய்ய வேண்டும்.

**ஆண்கள் மீது மாத்திரம் விலக்கப்பட்டவைகள்**

தலையை, துணி போன்றவைகளால் மறைப்பது, சட்டையையோ அல்லது தையல் போடப்பட்ட எந்தவித உடைகளையோ உடம்பில் எந்த இடத்திலாவது அணிவது.

பெண்கள் மீது மாத்திரம் விலக்கப்பட்டவைகள்

இஹ்ராமுடைய நிலையில் பெண்கள் கையுறை அணிவது, முகத்தை புர்காவால் மூடுவது கூடாது. ஆனால் அன்னிய ஆண்களுக்கு முன் இருக்கும் போது முகத்தை மூடிக்கொள்ள வேண்டும்.

**ஹஜ்ஜுடைய அர்க்கானுகள் (கடமைகள்)**

இவைகளைச் செய்யாமல் ஹஜ்ஜுநிறைவேறாது.

1-நிய்யத் வைப்பதோடு இஹ்ராம் உடை அணிதல். 2-அர∴பாவில் தங்குதல். 3-தவாபுல் இ∴பாலா செய்தல். 4-ஸ∴பா மர்வா மலைக்கு மத்தியில் ஹஜ்ஜுடைய ஸ∴யி செய்தல்.

**ஹஜ்ஜுடைய வாஜிபுகள் (அவசியமானவைகள்)**

(1) நபி (ஸல்) அவர்கள் கூறிய எல்லையிலிருந்து இஹ்ராம் அணிதல். (2) சூரியன் மறையும் வரை அர∴பாவில் தங்கி இருத்தல். (3) 10ம் இரவு முஸ்தலி∴பாவில் தங்குதல். (4) 10ம் நாள் காலையில் பெரிய ஜம்ராவிற்கு ஏழு கற்களும், 11,12ம் நாட்கள் மூன்று ஜம்ராக்களுக்கும் முறையே ஏழேழு கற்கள் வீதம் எறிதல், 13ம் நாள் மினாவில் தங்குபவர்கள் 13ம் நாளும் கல்லெறிய வேண்டும். (5) ஆண்கள் முடியை மழிப்பது அல்லது கத்தரிப்பது. பெண்கள் முடியின் நுனியில் விரலின் நுனியளவு கத்தரிப்பது. (6) 11,12ம் இரவில் மினாவில் தங்குவது. (13ம் நாள் விரும்பியவர்கள் மினாவில் தங்கலாம். இந்த இரவு தங்குவது அவசியமில்லை, ஆனால் சிறந்தது.)

# திரைப்படமும் - டெலி விஷனும்

இன்று உலகம் அறிவியலில் முன்னேறிவிட்டது. தொலைத் தொடர்பு சாதனங்களின் முன்னேற்றம், தகவல் தொழில் நுட்ப முன்னேற்றம் இன்னும் அச்சு ஊடகத்துறை மறறும் மின்னணு ஊடகத்துறை என்று எல்லாத் துறைகளிலும் விஞ்ஞானம் கொடிகட்டிப் பறக்கும் சாதன உலகில் (MEDIA AGE) ல் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எவ்வளவுதான் விஞ்ஞானம், தகவல் தொடர்புகள் முன்னேறினாலும் அதில் ஷைத்தானிய தாக்கமும், ஊடுருவலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. உதாரணத்திற்கு தகவல் தொழில் நுட்பத் துறையை எடுத்துக் கொண்டால்" நாம் வீட்டிலிருந்தபடியே அமெரிக்காவில் வாழும் மாற்று மதத்தவர்களுக்கு இஸ்லாத்தை எத்திவைக்கலாம் அதே போன்று முறையற்ற பெண்கள் தொடர்புக்கும் பயன்படுத்தலாம். இதனால்தான் சுருங்கிவிட்ட உலகத்தை விஞ்ஞானம் ஒரு கிராமம்(Global Village) ஆக மாற்றிவிட்டது. ஒவ்வொரு விஞ்ஞானத்தின் முன்னேற்றத்திலும் எவ்வளவு நன்மை இருந்தாலும் அதைவிடத் தீமைகளும் இருந்து கொண்டுதான் இருக்கின்றது. நாம் பயன்படுத்தும் முறையைப் பொருத்துதான் அது நன்மையானதா? அல்லது தீமையானதா? என அறிய முடிகிறது. இதில் மின்னணு ஊடகங்கள் (Electronic Media) என்று சொல்லப்படும். வானொலி(Radio), ஒலிப்பதிவு(Recording), திரைப்படம்(Film), தொலைக்காட்சி(Television), போன்றவை குறிப்பிடத்தக்கது. கல்வி, தொழில் நுட்பம், தகவல் தொடர்பு, ஆன்மீகம் போன்ற நன்மைகளை இதன் மூலம் நாம் பெற முடியும். ஆனால் இந்த நன்மையான காரியங்களில் இத்துறை பயன்படுவதைவிட ஆபாசம், விரசம், கொலை, கொள்ளை போன்ற தீய செயல்களில்தான் இத்துறை முனைப்புக் காட்டுகிறது. குறிப்பாக திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிகளில் நாம் பெறும் நன்மையை விட தீமைகள்தான் ஏராளம். இதன் பாதிப்புக்கள் குக்கிராமம் முதல் முன்னேறிவிட்ட பெரு நகரங்கள் வரை வியாபித்திருக்கிறது. அதனால்தான் இந்தக் கட்டுரையின் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட தலைப்பு திரைப்படமும், டெலிவி"னும்.

பெண்கள் அதிகாலை எழுந்து சுப்ஹுத் தொழுது, வீடு சுத்தம் செய்து, பாத்திரங்கள் விளக்கி, சமையல் செய்து லுஹர் (தொழுகை) நேரம் வந்து விட்டது என்று தொழச் சென்ற காலம் கடந்து, ஏழு மணிக்கு எழுந்து அவசர அவசரமாய் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி "இன்றைக்கு கொஞ்சம் லேட் கடையில் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கணவனை அனுப்பிவிட்டு அடுப்பில் சோற்றையும், குழம்பையும் ஏற்றி வைத்து விட்டு அப்பாடா! என்று தொலைக்காட்சிக்கு முன் அமர்ந்து குக்கரின் ஒலி வரும் வரை "மெட்டி ஒலி" யில் புதைந்து போகும் தாய்மார்களைப் பார்க்கிறோம். குழந்தைகளின் நிலைமையும் அதுதான்.

பிஞ்சுகளின் நெஞ்சங்களில் ஆன்மீகமும், நல்லொழுக்கங்களும் கற்பிக்கப்பட்டு பக்திமானாகத் திகழவேண்டியவர்கள் சின்னத் திரைத் தொடர்களில் சிக்கி சக்திமானாக உருமாறுகிறார்கள். கல்வி பயிலச் செல்லும் சிறார்கள் புத்தகப் பையிலும், நோட்டுகளின் அட்டைகளிலும் நடிகர், நடிகைகளின் கவர்ச்சி படங்களை காண முடிகிறது. சிறு குழந்தைகளுக்கு "ஸலாம்" கூறுதல் போன்ற நல்லொழுக்கங்களை கற்றுத் தர வேண்டிய பெற்றோர்கள் கூட வீட்டுக்கு வரும் விருந்தாளிகளிடம்" குழந்தைகளிடம் ஏதாவது சினிமாப் பாடலை பாடச் சொல்லி வேடிக்கை பார்த்து மகிழும் அவநிலைக்கு காரணம் நிச்சயமாக டி.வி மற்றும் திரைப்படங்களின் தாக்கம்தான். அவர்கள் பார்க்கும் போலிக்காட்சிகளை அவர்களது நடைமுறையிலும் செயல்படுத்துவதை பார்க்கிறோம்.

இந்த கட்டத்தில் "குமுதம்" வாசகி விஜயலட்சுமி என்பவரின் செய்தியை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர் கூறுகிறார் *சமீபத்தில் சன் டி.வியில் ஒளிபரப்பு செய்யப்பட்ட "இந்திரா" என்ற தொடரில் வரும் ஒரு கொலைக் காட்சியை நாங்கள் குடும்பத்துடன் பார்த்தோம். அப்போது எனது 5 வயது மகளும், ஒன்றரை வயது மகனும் உடன் இருந்தனர். மறுநாள் காய்கறி நறுக்கும் சமையலறைக்கு நான் சென்ற போது எனது ஒன்றரை வயது மகன் கையில் கத்தியை எடுத்துக் கொண்டு ஊ.. ஆ.. என்று டி.வியில் வந்ததைப் போன்று தன் அக்காவை மிரட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றேன். தொலைக்காட்சியின் விளைவு! கடவுளே! ...* என்று தொலைக்காட்சியின் விபரீதத்தை வர்ணிக்கிறார்.

(நன்றி : குமுதம்)

இது படிப்பதற்கு சாதாரண செய்தியாக இருந்தாலும் எந்த அளவுக்கு இந்த தொலைக்காட்சித் தொடர்கள் பச்சிளங் குழந்தைகளின் நெஞ்சங்களில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதற்கு இது ஓர் சாட்சி!

சமீப காலமாக சிறுவர்கள் ஓடிப்போகும் காட்சிகள் நடந்தேறுகின்றதே இதற்குக் காரணம் சினிமா மற்றும் தொலைக்காட்சிகளின் பாதிப்புகள். பள்ளியில் பயின்று கல்லூரி கடந்து மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் உருவாக வேண்டிய பாலகர்கள் சினிமா மாயையில் சிக்கி நடிகனாக வேண்டும் என்ற ஆசையில் வீட்டை விட்டு வெளியேறி திக்கற்றவர்களாக திரியும் காட்சிகள் எதைக் காட்டுகிறது" இதிலிருந்து இந்த ஷைத்தானிய ஊடகங்கள் நம் குழந்தைகளை வழிகேட்டிற்கு அழைத்துச் செல்கிறது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

"தினமணி" என்ற நாளிதழின் வாசகர் கடிதம் ஒன்றினை இங்கு மேற்கோள் காட்டினால் பொருத்தமானதாக இருக்கும். "*வளர் இளம் பருவத்திடம் ஓடிப்போகும் கலாச்சாரம் பரவலாகக் காணப்படுவதற்கு சின்னத் திரைத் தொடர்களும், வண்ணத்திரைகளும் தான் காரணம். பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில்தான் இந்த ஓடிப்போகும் நிகழ்வு நடைபெறுகிறது. வறுமையும், பண்பாட்டுச் சீரழிவும் காணாமல் போனால்தான் இந்த சமுதாயத்தில் ஓடிப்போகும் கலாச்சாரம் இல்லாத நிலை உருவாகும்.*

*" சோம நடராசன் (கரூர்) "* ***நன்றி : தினமணி (28-05-2004)***

இது எதைக் காட்டுகிறது? சினிமாவில் வருவதைப் போன்று உயர்மட்ட வாழ்க்கை வேண்டும் என்ற போலி ஆசையில் தனது வாழ்வையே சூனியமாகும் அவல நிலை உருவாகுவதற்கு சின்னத் திரைத் தொடர்களும், வெள்ளித்திரைகளும் அதிக அளவிற்கு காரணமாக இருக்கின்றன.

குழந்தைப் பருவம் பாழ்பட இந்த தொலைக்காட்சி தொடர்களின் வியாபகம் எந்த அளவிற்கு வேரூன்றியிருக்கிறது என்பதை இன்னும் விரிவாக நோக்க "ஒற்றுமை" இதழில் வெளிவந்த "தொலைக்காட்சிகளில் தொலைந்து போகும் எதிர்கால சமுதாயம்" என்ற ஆய்வுக் கட்டுரையை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

ஒரு புள்ளிவிபரத்தின் படி ஒரு அமெரிக்கக் குடிமகன் ஒவ்வொரு நாளும் சராசரியாக மூன்றே முக்கால் மணி நேரம் தொலைக்காட்சியைப் பார்க்கிறான். 65 ஆண்டு கால உலக வாழ்க்கையில் ஒரு மனிதன் ஒன்பது ஆண்டுகாலம் தன் வாழ்க்கையை தொலைக்காட்சியை பார்ப்பதில் வீணடிக்கிறான். இப்படி அவன் பார்த்த தொலைக்காட்சியில் 20 இலட்சம் விளம்பரங்கள் வருகின்றன. இதனால்தான் தம் தேவைகளைவிட அதிகமாக பொருட்களை தாங்கள் வாங்குவதாக 82% அமெரிக்கர்கள் கூறுகின்றனர். ஒவ்வொரு வாரமும் சராசரியாக 1680 நிமிடங்கள் ஒரு குழந்தை தொலைக்காட்சியை பார்ப்பதில் செலவழிக்கிறது. ஆனால் தன் பெற்றோருடன் பயனுள்ள வி“யங்களை குறித்துப் பேச 38.5 நிமிடங்கள் மட்டுமே ஒரு குழந்தை பயன்படுத்துகிறது. என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு வயதுக் குழந்தை தொலைக்காட்சி முன் தினமும் 6 மணி நேரத்தைக் கழிக்கிறது. ஆண்டொன்றுக்கு 900 மணி நேரத்தை சிறுவர்கள் பள்ளிக் கூடங்களில் கழிக்கின்றனர். ஆனால் அவர்கள் தொலைக்காட்சியைப் பார்க்க எடுத்துக் கொள்ளும் நேரம் 1023 மணி நேரங்கள். உயர்நிலை பள்ளியை முடிக்கும் மாணவன் ஒருவன் 19,000 மணி நேரம் தொலைக்காட்சியை பார்த்த அனுபவம் உடையவனாய் அப்பருவத்தை அடைகிறான். இதனால்தான் நாம் தொலைக்காட்சியை நேரத்தை கொல்லும் இரத்தக் காட்டேறி என வர்ணிக்கிறோம். 18 வயதை அடைவதற்குள் ஒரு சிறுவன் தொலைக்காட்சி வழியாக இரண்டு இலட்சம் வன்முறைக் காட்சிகள் பார்த்து வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 11 வயதை அடைவதற்குள் 8,000 கொலைகளையும் இன்னும் 10,000 வன்முறைகளையும் ஒரு சராசரி குழந்தை பார்த்து விடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் தொடராக ஒளிபரப்பு செய்து வந்த "சக்திமான்" தொடரில் 25 நிமிடத்துக்குள் துப்பாக்கிச் சூடு, கத்திக்குத்து, கழுத்தை நெரித்துக் கொலை, எரித்தல் என்று சராசரியாக 17 வன்முறைக் காட்சிகள் ஒளிபரப்பப் படுகிறது. அமெரிக்காவில் 36,000 பள்ளிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் வன்முறையை தொலைக்காட்சியில் பார்ப்பதற்கும், செயலில் இறங்குவதற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் தொலைக்காட்சியை சிறுவர்கள் எவ்வித உணர்வும் இல்லாமல் பார்ப்பதில்லை என்றும் தாங்கள் பார்க்கும் ஒவ்வொரு காட்சியையும் தமது ஆழ் மனதில் உள்வாங்கிக் கொள்கிறார்கள். இதனடிப்படையில் அவர்கள் செயல்களில் இறங்குவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நிஜத்திற்கும், நிழலுக்கும் இடையே எவ்வித வேறுபாட்டையும் இவர்களால் காணமுடிவதில்லை என்றும், தொலைக்காட்சி ஏற்படுத்திய பாதிப்புகளால் வாழ்க்கை பயங்கரமானதாகவும் இருள் சூழ்ந்ததாகவும், கவலைக்குரியதாகவும் ஆகிவிடுவதாக பெருவாரியான குழந்தைகள் கருதுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தொலைக்காட்சிக்கு அடிமையானவர்கள் போதைப் பொருள்களுக்கும் அடிமையானவர்கள் போன்றுதான் நடந்து கொள்கிறார்கள். ஆனால் தொலைக்காட்சி போதைப் பொருள்களை விட கொடூரமானது. அது மனிதனின் மனதை பாழாக்கி வன்முறை மீது நாட்டம் கொள்ள வைத்து தனி மனிதரையும், நாட்டையும், சமுதாயத்தையும் அது அழிக்கின்றது. தொலைக்காட்சி வளர்ந்து வரும் தலைமுறையின் மனநிலை மட்டுமின்றி உடல் நலனையும் வெகுவாகப் பாதிக்கின்றது என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அளவுக்கதிகமாக தொலைக்காட்சி பார்ப்பதால் பள்ளி மாணவர்களால் குறைந்த பட்ச அளவுகூட உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுகளில் ஈடுபட முடியவில்லை. தொலைக்காட்சிப் பெட்டியின் முன் தவம் கிடக்கும் 5 வயதில் இருந்து 8 வயதுக் குழந்தைகளுக்கு இதய நோய்களில் ஏதாவது ஒன்று தாக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

1960 களில் இருந்த தொகையைவிட 1990 களில் மிதமிஞ்சிய உடல் பருமன் கொண்ட குழந்தைகளின் எண்ணிக்கை இரு மடங்கு அதிகரிப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதற்கு காரணம் உடல் ரீதியாக எவ்வித நடவடிக்கைகளில் ஈடுபடாமலும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன் முடங்கிக் கிடப்பதும் தான் காரணம் என மருத்துவர்கள் கூறுகிறார்கள். மேலும் பெரியவர்களின் அந்தரங்க நடவடிக்கைகளெல்லாம் சிறுவர்களுக்கு அப்பட்டமாக வெளிச்சம் போட்டுக் காட்டும் சமூக துரோகிகளாகவும் தொலைக்காட்சி விளங்குகிறது. பெரியவர்கள் சண்டை போட்டுக் கொள்வதையும், மனமுடைந்து கண்ணீர் விடுதல் ,கொலை, பாலியல் உறவுகள் கொள்வது மற்றும் வன்முறைகள் போன்றவற்றை குழந்தைகள் தொலைக்காட்சிகளில் காண்கிறார்கள். பெரியவர்களின் பொறுப்பற்ற ஒழுக்கக் கேடான வாழ்க்கைகளை தொலைக்காட்சியில் மீண்டும் மீண்டும் பார்க்கும் குழந்தைகள் அவர்களை தவறுகளுக்கு முன்னுதாரணமாக்குகிறார்கள். பெரியவர்களின் அந்தரங்கங்கள் அம்பலப்படுத்தப்படுவதினால் குழந்தைகள் கள்ளம் கபடமற்ற தன்மையை இழக்கின்றனர். பசுமரத்து ஆணி போல தொலைக்காட்சியில் சித்தரிக்கப்படும் போலியான நிகழ்வுகள் உண்மையான வாழ்வில் நடப்புகளாக்க பிஞ்சு நெஞ்சங்களில் பதிவாகின்றன. இதனால் இவர்களின் எதிர்காலம் பாழ்படும் அளவிற்கு நஞ்சு விதைகள் விதைக்கப்படுகின்றன. இந்த அபாயத்தை உணராமல் செயற்கைக் கோள் அலைவரிசைகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகி மனித வாழ்வின் நிலையை பெரும் அபாயத்திற்கு அழைத்துச் செல்கிறது. **(நன்றி : ஒற்றுமை, ஜுன்-2001)**

தொலைக்காட்சி வீட்டின் எஜமானாகி பலரின் வழிகாட்டியாகவும் மாறியுள்ளது. ஆக்கிரமிப்பால் சமூக ஒழுக்க மாண்புகள் உலகெங்கும் வெகுவாகச் சீரழிந்து வருகின்றது. முஸ்லிம்களைப் பொருத்தவரை இஸ்லாத்திற்கு முரணான பல்வேறு ஒழுக்கக் கேடகளிலும் மூழ்குவது இந்த கேடுகெட்ட தொலைக்காட்சி மூலமாகத்தான் நமது இளைஞர்களை சிந்தனை அடிமைத்துவத்திற்கும், ஒழுக்கச் சீரழிவிக்கும் அழைத்துச் செல்லும் இந்தத் தொலைக்காட்சி மற்றும் சினிமாக்களின் கோரப் பிடியிலிருந்து நாம் பாதுகாப்புப் பெற வேண்டும்.

இன்று சமுதாயம் எந்த அளவிற்குச் சீர் கேடுகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளது! நடிகர், நடிகைகள் அணிந்த உடைகளைப் போன்று உடுத்துவதிலும், அவர்களைப் போன்று சிகை அலங்காரம் செய்து கொள்வதிலும் இன்னும் Girl Friend, Boy Friend கலாச்சாரம், ராக்கிங், ஈவ்-டீசிங், டேட்டிங் (Dating) என்ற பெயரில் ஹோட்டல்களில் இளம் ஆணும், பெண்ணும் சந்தித்துக் கொள்ளுதல் போன்ற மானக்கேடான செயல்பாடுகளை மேற்கத்திய கலாச்சாரம் என்ற போர்வையில் நமது இளைஞர்களை மூளைச் சலவை செய்யப்பட்டு திணித்து சமூகச் சீர் கேடுகளுக்கு காரணமாக இருப்பது இந்த தொலைக்காட்சி மற்றும் சினிமாத் துறை அல்லவா? கல்லூரி மற்றும் பள்ளி மாணவிகள் அரைகுறை ஆடைகள் அணிவதற்கு அடிகோலியவை இந்த சின்னத் திரையில்

வரும் Mtv – V Channel போன்ற மட்ட ரக சானல்கள் அல்லவா? மேற்கத்திய மட்டமான நாகரீகத்தை(?) கற்றுக் கொடுக்கும் இந்த கேடுகெட்ட ஊடகங்களினால் எத்தனையோ பள்ளி மாணவிகள் கருத்தரிப்புக்கும், கருக்கலைப்புக்கும் உள்ளாகின்றனரே!

டி.வி மற்றும் சினிமா போன்ற இந்த ஊடகங்களின் கோரப்பிடியில் சிக்கிச் சீர்கெட்டுக் கிடக்கும் இளைய சமுதாயத்தைப் பார்த்து அதே சினிமாத்துறையில் அங்கமாக வகிக்கும் வைரமுத்து என்ற கவிஞர் தன் உள்ளக் குமறலை பின்வருமாறு கூறுகிறார்.

*“எங்கே போகின்றோம் என்று தெரியாமல் அலைகளின் முதுகுகளில் சவாரி செய்யும் நீர்க் குமிழிகளைப் போன்று நீயும் குறிக்கோளின்றி சென்று கொண்டிருக்கிறாயே!*
*உன் முதுகுக்குப் பின்னால் பள்ளம், முதுகுக்கு முன்னால் இருட்டு கண்பார்வை உனக்கு இருக்கின்றதா? இல்லையா? என்று சோதித்துப் பார்க்கக் கூட அந்த இருட்டு உனக்கு சந்தர்ப்பம் அளிக்கவில்லை!*
*ஆட்டுவித்தால் ஆடும் பொம்மைகளாய் சாவி கொடுத்தால் சுற்றும் சக்கரங்களாய் நம் இளைஞர்கள் இருந்தால் அடுத்த தலைமுறை நகராத கூடமாய் நசிந்து போகும்.*
*இளைஞனே! உன்னைப் பற்றி எனக்கு வரும் தகவல்கள் என் குதூகலத்தையே குழிதோண்டிப் புதைக்கின்றன! எங்கே போகின்றோம் இளைஞர்களே?*
*ஒரு கல்லூரி விடுதிக்கு விலைமாதர் வருவதாக என் செவிக்கு எட்டுகிறது! பாவிகளே! இது கல்விச் சாலையா? அல்லது கலவிச் சாலையா?*
*வேறொரு விடுதியில் ஒரு மாணவியின் கைப் பையில் போதை மாத்திரையும், கருத்தடை மாத்திரையும் சம விகிதத்தில் சாட்சிகள் எட்டுகின்றன!*
*அடிப் பாவிப் பெண்ணே! நீ மனத்தை நிரப்ப வந்தாயா? அல்லது மடியை நிரப்ப வந்தாயா?*

- *இந்த இளைய தலைமுறை தடுமாறிக் கொண்டிருப்பதற்கு யார் பொறுப்பு?*
- *இவர்கள் இப்படி கனாக் காரர்களாய் அலைவதற்கு யார் காரணம்?*
- *இவர்களுக்கு இந்த ஆடை கட்டாத ஆசைகளை ஆட்டிவிட்டது எது?*
- *வாழ்க்கையின் யதார்த்தம் பார்த்து அஞ்சும் மனோபாவம் எப்படி வந்தது?*
- *இவர்கள் இப்படி உள்ளீடற்றவர்களாய் உருமாற்றியது எது?*

*(நன்றி : “வைரமுத்து”வின் சிற்பியே உன்னைச் செதுக்குகின்றேன்)*

இப்படி கவிஞன் பல கேள்விகளை எழுப்புகின்றான். அத்தனை கேள்விக்கும் ஏகோபித்த பதில் சின்னத்திரையும், சினிமாத் திரையும்தான். ∴பேஷன் என்ற பெயரில் கவர்ச்சி ஆடைகள், இரட்டை அர்த்தமுள்ள விரசல் நடை பாடல்கள் கூடவே செவியை பதம் பார்க்கும் இசை இன்னும் குடும்பத்துடன் பார்க்க முடியாத விரசக் காட்சிகள் என்று அத்தனை சீர்கேடுகளையும் ஒருங்கே பெற்ற ஷைத்தானிய ஊடகம்தான் இந்த சினிமாவும், தொலைக்காட்சியும்.
இதனால்தான் சினிமாவின் கோரப்பிடியை சுவாசித்த ஆஸ்கார் விருது பெற்ற நடிகன் ஆண்டெனி குயின் (Antony Queen) இப்படிக் கூறினான்.

சினிமா என்பது வன்முறையின் ஆடுகளம் (CINEMA IS THE AREA OF THE VULGARITY) என்று. இன்னும் நடிப்பைப் பற்றியும் தான் நடித்து வந்த சினிமாத் துறையைப் பற்றியும் மனம் வருந்தி சினிமாவினால் என் வாழ்நாள்கள் நஷ்டமடைந்துவிட்டன, என்று கூறி சினிமாத் துறைக்கு முழுக்குப் போட்டுவிட்டான்.
மேலும் இந்தச் சினிமாவிலும் தொலைக்காட்சியிலும் வரும் இசை மனிதனை செவிடனாக்கி மூளையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
**இஸ்லாம் இதை வன்மையாகக் கண்டிக்கின்றது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :**
உமையா கோத்திரமே! இசையை அஞ்சிக் கொள்ளுங்கள். அது வெட்கத்தை அழித்து உடல் உணர்வை தூண்டுகின்றது. மனிதாப மானத்தை மாய்த்துவிடுகின்றது. மதுவைப் போன்ற மயக்கத்தை ஏற்படுத்துகிறது. பெண்களை அதில் அறவே பங்கேற்கச் செய்யாதீர்கள்.
(அறிவிப்பாளர் : யஸீது பின் வலீது(ரலி), ஆதாரம் : பைஹகீ)
நபி(ஸல்) அவர்கள் இப்படிக் கூறியிருக்க, பொழுது போகவில்லை என்று சினிமாப் பாடல்களையும் இசையையும் நேசித்து காதுகளில் “வாக்மேன்” பொருத்தி உல்லாசத்தில் உலாவரும் முஸ்லிம் சகோதர, சகோதரிகளை என்ன செய்வது?
தொழுகைக்கு அழைத்தால் “நேரமில்லை” என்று கூறும் நம் சகோதரர்கள் சினிமாவும், டி.வியும் பார்ப்பதற்கு தன்னையே அறியாமல் நேரம் ஒதுக்கிக் கொள்வதைப் பார்க்கின்றோம். மொத்தத்தில் இந்த சினிமா, தொலைக்காட்சி மீடியாக்களினால் மனிதன் பெரு நஷ்டத்திற்கு ஆளாகின்றான். மானக்கேடான காரியங்கள் செய்யவும் முனைகின்றான்
அல்லாஹ் தன் திருமறையில்...
**நிச்சயமாக, அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும் உறவினர்களுக்குக் கொடுப்பதைக் கொண்டும் ஏவுகின்றான். அன்றியும் மானக்கேடான காரியங்கள், பாவமான காரியங்கள், அக்கிரமங்கள் ஆகியவற்றை விட்டும் உங்களை விலக்குகின்றான். நீங்கள் நினைவுகூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கின்றான். (16:90)**
எனவே அல்லாஹ் மானக்கேடான காரியத்தை விலக்குகின்றான். இந்த மானக்கேடான அத்தனை ஒழுக்கக் கேடுகளையும் பொதிந்து தரக்கூடிய இந்த தரங்கெட்ட மீடியாக்கள் இவ்வுலக வாழ்க்கையை அலங்கரித்துக் காட்டுகின்றன. இன்பத்தை ஊட்டுவது போன்ற போலியை ஏற்படுத்துகின்றன. மறுமையை மறுக்கச் செய்கின்றன.

வல்லோன் வான்மறையில் **“நிச்சயமாக செவிப்புலனும், பார்வையும், இதயமும் அவற்றின் செயல்கள் பற்றி மறுமையில் கேள்வி கேட்கப்படும”**
எனவே பொழுது போகவில்லை என்று போலியான இந்த தொலைக்காட்சி மற்றும் சினிமாவில் நேரத்தை வீணடிப்போரை அல்லாஹ் வன்மையாக எச்சரிக்கை செய்கின்றான். மறுமையில் அவர்கள் கண்களையும், செவிகளையும், இதயத்தையும் இறைவன் விசாரிப்பான். இந்த உலகத்தின் மயக்கும் இன்பத்திற்கு நாம் பலியாகிவிடக்கூடாது. மறுமைதான் நிலையானது, என்று உணாந்து போலியான இன்பம் தரக்கூடிய தொலைக்காட்சி மற்றும் சினிமாத் துறையை உடனே புறக்கணித்து நிரந்தர இன்பத்தை நோக்கி நம் கால்கள் நடைபோடட்டும். மறுமையில் நரக நெருப்பை விட்டு நம்மை வல்ல இறைவன் பாதுகாக்கட்டும். ஆமீன்.

**நெல்லை : இறைநேசன்**

# எய்ட்ஸ்

**(அச்சுறுத்தும் கொள்ளை நோய்)**

Acquired Immune Deficiency Syndrome (AIDS) - என்பதே இதன் விரிவாக்கம். அதாவது மனித உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியை குறைத்துவிடும் வைரஸ் தாக்குதலே எய்ட்ஸ் எனப்படும். மனிதனின் நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும் வைரஸ் ஆன HIV+ (Human Immunodeficiency) மனிதனின் இரத்தத்தில் கலந்துவிடுவதனால் எய்ட்ஸ் மனிதனைத் தாக்கிவிடுகிறது. இரத்தத்தில் கலந்த ஹெஜ்.ஐ.வி வைரஸின் முதல் வேலையாக மனித இரத்தத்தில் இருக்கும் நோய் எதிர்ப்புச் சக்திச் செல்களான வெள்ளை அணுக்களை அழிக்கிறது. அச் செல்களை அழிப்பதோடல்லாமல் ஹெ.ஐ.வி வைரஸும் பல்கிப் பெருகிக் கொண்டே செல்கிறது.

இவ்வாறாக மனித உடலில் உள்ள வெள்ளை அணுக்களை அழித்து, நோய் எதிர்ப்புச் சக்தியைக் (Anti Body) குறைத்து விடுவதால் பிறகு அம்மனிதனுக்குத் தாக்கும் பாக்டீரியாக்கள் மூலமாக காய்ச்சல், தலைவலி போன்ற எந்தவிதமான நோய் ஏற்பட்டாலும் அது குணமாவதற்கு நெடுங்காலம் எடுத்துக் கொள்கிறது. பிறகு தாக்கப்படும் நோயினால் அவர் மரணத்தை அடைந்து விடுகிறார். சில சமயம் அதிக பட்சமாக 6 முதல் 10 வருடங்கள் கூட இந்த பாதிப்புக்கு எடுத்துக் கொள்கிறது. எனினும் எய்ட்ஸ் பாதித்த மனிதன் மிக விரைவிலேயே அவர் தன நோய் எதிர்ப்புச் சக்திக்கேற்ப மரணத்தைச் சந்தித்து விடுகிறார்.

**எய்ட்ஸின் துவக்கம்**

1983-ல் மருத்துவ வல்லுனர்களான லுக் மான்டாக்னொ மற்றும் நே"னல் கேன்சர் இன்ஸ்ட்டியூட்டை சேர்ந்த ராபர்ட் கேலோ குழுவும் மனிதர்களுக்குத் தாக்கும் புதுவகையான வைரஸ்ஸை கண்டறிந்தனர். அவர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியின் முடிவாக இந்த வைரஸ் ஆனது முறையற்ற பாலியல் தொடர்புகளின் போது உருவாகி இரத்தத்தில் கலந்துவிடுவதை கண்டறிந்தனர்.

**ஆரம்ப அறிகுறிகள்**

ஹெஜ்.ஐ.வி தாக்கிய முதல் மூன்று வாரங்களிலேயே அம்மனிதனுக்கு தொடர் காய்ச்சல், தலைவலி, தோல் வியாதிகள், உடல் வேதனை போன்றவைகள் அதிகமாகிவிடுகின்றன. இச்சமயத்தில் ஹெஜ்.ஐ.வி வைரஸ் ஆனது பிளவுபட்டு பிளவுபட்டு அதிகரித்துக் கொண்டே சென்றுவிடுகிறது. இதன் காரணமாக பசியின்மை, உடல் முற்றிலும் இளைத்துவிடுதல் ஆகியவைகளுக்கு ஆளாகின்றான்.

இந்த வைரஸ் ஆனது நேரடியாக மனித இரத்தத்தில் பாய்ந்து வெள்ளை அணுக்களை அழிப்பதாலும், அதே சமயம் இதன் உற்பத்தியையும் பெருக்கிக் கொண்டிருப்பதாலும் இதற்கு மருந்து கண்டுபிடிப்பது மருத்துவத் துறைக்கு பெரும் சவாலாகவே திகழ்ந்து வருகிறது.

**பரவும் முறை**

மக்கள் அனைவரும் இதன் பாதிப்பை அறிந்து அச்சமுற்றே இருக்கிறார்கள. ஹெஜ்.ஐ.வி தாக்கிய நோயாளியை சமுதாயத்திலிருந்தே தனிமைப்படுத்தி வைத்துவிடுகிறார்கள். இந்நோயானது பலமுறைகளில் பரவுகிறது. எய்ட்ஸ் பாதிப்படைந்த தாயிடமிருந்து அதன் சிறு குழந்தைக்கும், எய்ட்ஸ் நோயாளியின் ரத்தம் ஒட்டிய ஊசிகள், பிளேடுகள் போன்ற இரத்த சம்மந்தமான பரவல் முறைகளில் தொற்றிக் கொள்கிறது. எய்ட்ஸ் நோயாளியை தொடுவதாலோ, அவருக்குக் கடித்த கொசு பிறருக்குக் கடிப்பதாலோ, அவர் இருமல், தும்மல் மூலமாகவோ அல்லது எந்த விதமான காற்றின் மூலமாகவோ பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் நோயாளிகளை சமுதாயத்திலிருந்து ஒதுக்காமல் அவருடன் பழகுங்கள். எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவரை சமுதாயம் ஒதுக்கித் தள்ளுவதால் அவர்கள் மனதளவில் பெரும் அவதியடைகிறார்கள். பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்று அறிவித்தாலும் எய்ட்ஸ் என்றால் எல்லோருக்கும் ஒரு பீதி ஏற்படத்தான் செய்கிறது. எனவே இந்த ஆட்கொல்லி நோயிலிருந்து முற்றாகத் தவிர்ந்து கொள்ளுங்கள்.

**புள்ளி விபரங்கள்**

1999 ஆம் ஆண்டு மேற்கத்திய நாடுகளின் எடுக்கப்பட்ட ஹெஜ்.ஐ.வி சோதனைகளின் புள்ளி விவரப்படி வட அமெரிக்காவில் 920,000 பேர்களும், மத்திய மற்றும் தென் அமெரிக்காவில் 1,300,000 பேர்களும், கரீபியனில் 360,00 பேர்களும், மேற்கு ஐரோப்பாவில் 520,000 பேர்களும், தென் ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் 220,000 பேர்களும், சப்-செஹாரானில் 23,300,000 பேர்களும், தென் கிழக்கு ஆசிய நாடுகளில் 6,000,000 பேர்களும் ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் 12,000 பேர்களும் இந்தக் கொடூர வைரஸ் பாதிப்பால் எய்ட்ஸ் நோயோடு மரணத்தை எதிர்நோக்கி வாழ்ந்து வருகிறார்கள் என்ற திகிலூட்டும் உண்மை தெரியவருகிறது. சப்- செஸரானில் மட்டும் 4 பேர்களுக்கு ஒருவர் என்ற நிலையில் இருக்கிறார்கள். 2000 ஆவது ஆண்டு இறுதியில் உலகம் முழுமையும் மேற்கொண்ட ஆய்வில் 31.1 மில்லியன் பேர் எய்ட்ஸ் நோயால் பாதிப்படைந்துள்ளதை கண்டறிந்தனர். உலகில் வாழும் அனைவருக்கும் இச் சோதனை மேற்கொண்டால் இதன் அளவு பல மடங்கு கூடும்.

2004-ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் உலகம் முழுவதிலும் 40 மில்லியன் மக்களுக்கு எய்ட்ஸ் நோய் இருப்பதாகவும், இது அல்லாமல் 20 மில்லியன் மக்கள் எய்ட்ஸ் நோய் தாக்கி பலியாகியுள்ளார்கள்.

எய்ட்ஸ் நோயாளிகள் அதிகமாக உள்ள நாடாக உலகிலேயே இரண்டாம் இடத்தை வகிக்கிறது இந்தியா. இந்தியாவிலேயே மஹாரா"டிரா மாநிலத்தில் எய்ட்ஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

எய்ட்ஸ் பற்றி அல்-மதீனா பத்திரிக்கையில் கடந்த 18-10-1425ஹிஜ்ரி அன்று வெளிவந்த செய்தி... 2003ம் ஆண்டு வரை உலகத்தில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 60 மில்லியன் பேர். அதில் 20 மில்லியன் பேர்கள் மரணித்து விட்டார்கள். 2003ம் ஆண்டு மட்டும் எய்ட்ஸ் பாதித்தவர்கள் 5 மில்லியன் பேர். அதில் மரணித்தவர்கள் 3 மில்லியன் பேர். இவர்களில் 48 சதவீதம் பெண்கள். 2003 ம் ஆண்டு வரை எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளின் படி 1734 பேர் சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர்களும், 6064 வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் அதிகமானவர்கள் ஜித்தா, ரியாத் மற்றும் கிழக்குப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

2003ம் ஆண்டு மட்டும் எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட சவூதி அரேபிய நாட்டைச் சார்ந்தவர்கள் 238 பேர். எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் 388 பேர். (நன்றி : அல்-மதீனா)

**(தொடர்ச்சி 12ம் பக்கம்).**

# துல் ஹஜ் மாதத்தின் முந்திய பத்து நாட்களின் சிறப்புகளும், உழ்ஹிய்யாவின் சட்டங்களும்

ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களும் மிக சிறப்புக்குரிய நாட்களாகும், ஆகவே இந்த நாட்களில் செய்யும் நல் அமல்களை தெரிந்து நாமும் அமல் செய்து அல்லாஹ்வின் அருட்கொடைகளை பெற்றவர்களாகுவோமாக.

**சிறப்புகள்:**

1- துல் ஹஜ் மாத முதல் பத்து நாட்களில் செய்யக்கூடிய நல் அமல்களுக்கு ஈடாக வேறு எந்த நாட்களில் செய்யும் நல் அமல்களும் அல்லாஹ்வுக்கு மிகப்பிரியமானவைகளாக இல்லை என நபி (ஸல்) அவர்கள் கூறியபோது, அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதை விடவுமா? என நபித்தோழர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதை விடவும்தான், ஆனால் அல்லாஹ்வின் பாதையில் பொருளையும், உயிரையும் அர்ப்பணித்து வீரமரணம் அடைந்தவரைத் தவிர என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம் : புகாரி

2- நாட்களில் மிகச்சிறந்த நாள் அரபாவுடைய நாள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம் : ஸஹீஹ் இப்னு ஹிப்பான்

**சிறப்பான இந்த நாட்களில் செய்யும் அமல்கள்**

1- ஹஜ் உம்ரா - ஒரு உம்ரா மற்ற உம்ராவுக்கு இடைப்பட்ட பாவங்களுக்கு பரிகாரமாகும், மேலும் ஏற்றுக்கொள்ப்பட்ட ஹஜ்ஜுக்குரிய கூலி சுவர்க்கத்தைத்தவிர வேறு எதுவும் இல்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம் - புகாரி, முஸ்லிம்

2-உபரியான தொழுகைகள், நோன்புகள், தர்மங்கள், உறவினர்களுக்கு உதவுவது, குர்ஆன் ஓதுவது, பாவமன்னிப்பு தேடுவது, நன்மையை ஏவுவது, தீமையை தடுப்பது போன்ற நல் அமல்களில் ஈடுபடுவது.

குறிப்பு- துல் ஹஜ் மாதத்தின் பத்தாம் நாளாகிய பெருநாளன்று நோன்பு நோற்பது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆதாரம் - புகாரி, முஸ்லிம்

3- அர.்.பா நோன்பு- அர.்.பா நோன்பு (நோற்பவருக்காக) அந்த நாளுக்கு முந்திய வருடத்தின் பாவங்களையும், அதற்கு பின்னுள்ள வருடத்தின் பாவங்களையும் அல்லாஹ் மன்னிப்பான் என நான் நம்புகின்றேன் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம்-முஸ்லிம்

குறிப்பு:- **அர.்.பா நோன்பை ஹாஜிகள் நோற்க்கக்கூடாது, ஹஜ் செய்யாதவர்கள் இந்த நோன்பை நோற்பது மிகவும் சிறந்தது.**

அர.்.பா தினத்தன்று அர.்.பாவில் தங்கியிருந்த நபி (ஸல்) அவர்கள் தன்னிடம் கொண்டுவந்த பாலை அருந்தி தான் நோன்பு நோற்கவில்லை என்பதை மக்களுக்கு அறிவித்திருக்கின்றார்கள்.

ஆதாரம் புகாரி, முஸ்லிம்

4- தக்பீர் கூறுவது- கடமையான தொழுகைகளுக்குப் பின்னரும், பள்ளிவாசல், வீடு, கடைவீதி போன்ற எல்லா இடங்களிலும் தக்பீர் கூறுவது,

துல் ஹஜ் மாத முதல் பத்து நாட்களில் செய்யக்கூடிய நல் அமல்களுக்கு ஈடாக வேறு எந்த நாட்களில் செய்யும் நல் அமல்களும் அல்லாஹ்வுக்கு மிகப்பிரியமானவைகளாக இல்லை. ஆகவே **லாஇலாஹா இல்லல்லாஹ், அல்லாஹுஂ அக்பர், அல்ஹம்து லில்லாஹ்** போன்ற திக்ருகளை அதிகமாக செய்யுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம் : அஹ்மத்

இப்னு உமர் (ரலி), அபூஹுஂரைரா (ரலி) ஆகிய இரு நபித்தோழர்களும் துல்ஹஜ் (மாதம் ஆரம்ப) பத்து தினங்களிலும் கடைவீதிகளுக்கு செல்லும் போதெல்லாம் தக்பீர் கூறுவார்கள், இவ்விருவரும் கூறுவதை கேட்கின்ற மற்ற மக்களும் தக்பீர் கூறுவார்கள்.

ஆதாரம் - புகாரி

பெருநாளைக்காக கூறக்கூடிய தக்பீரை அர.்.பா நாளின் ஸுஂப்ஹுஂ தொழுகையிலிருந்து பிறை 13ம் நாள் அஸர் தொழுகை வரைக்கும் கூறுவது.

5- ஹஜ் பெருநாள் தொழுகை, இன்னும் குத்பா பிரசங்கத்தில் கலந்து கொள்வது.

நோன்புப் பெருநாளிலும், ஹஜ்ஜுஂப்பெருநாளிலும் கன்னிப்பெண்கள், மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்கள் (உட்பட) முஸ்லிம்களின் பிரார்த்தனைகளிலும், நல்ல அமல்களிலும் கலந்து கொள்ள வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டார்கள். மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்கள் தொழுகையில் கலந்து கொள்ளாமல் தொழுகை நடக்கும் பகுதிக்கு வெளியே இருந்து கொள்ள வேண்டும் என்றார்கள். ஆதாரம் :- புகாரி, முஸ்லிம்

6- உழ்ஹிய்யா

உழ்ஹிய்யா என்பது ஹஜ்ஜுஂப் பெருநாள் தொழுகைக்கு பின் இறை திருப்தியை நாடி அறுக்கப்படும் பிராணிக்கு சொல்லப்படும், இது நபியவர்கள் வலியுறுத்திய சுன்னத்தாகும். கொம்புள்ள, கறுப்பு நிறம் கலந்த இரண்டு வெள்ளை நிற ஆடுகளை நபி (ஸல்) அவர்கள் உழ்ஹிய்யாவாக கொடுத்தார்கள், அப்போது **பிஸ்மில்லாஹி அல்லாஹுஂ அக்பர்** என்று கூறி அவ்விரண்டின் ஒரு பக்கத்தின் மீது தனது காலை வைத்து கையால் அறுத்தார்கள். ஆதாரம் - புகாரி

**உழ்ஹிய்யா கொடுப்பதற்கு தகுதியான பிராணிகள்**

- ஆடு. மாடு, ஒட்டகம் (புகாரி)
- ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆடு போதுமாகும் (திர்மிதி)
- மாட்டிலும், ஒட்டகத்திலும் ஏழு பேர்கள் பங்கு கொள்ளலாம். (திர்மிதி)
- உழ்ஹிய்யாவிற்கான கால் நடைகளில் கீழ்க்கண்ட குறைகள் இருக்கக்கூடாது

கண் குருடு, கடுமையான நோயானவை, மிகவும் மெலிந்தவை, நொண்டியானவை, அங்கங்கள் குறையுள்ளவை.

**நேரம்**

ஹஜ்ஜுஂப்பெருநாள் தொழுகைக்கு பின் அறுக்க வேண்டும், யார் தொழுகைக்கு முன் அறுக்கின்றாரோ அது உழ்ஹிய்யாவாக ஆகாது, அவர் தன் குடும்பத்தின் தேவைக்காக அறுத்ததாகவே கணக்கிடப்படும்.

யார் தொழுகைக்கு முன் அறுக்கின்றாரோ அவர் இன்னும் ஒரு முறை குர்பாணி கொடுக்கட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம் - புகாரி,முஸ்லிம்

யார் (பெருநாள்) தொழுகைக்கு முன் அறுக்கின்றாரோ அது அவரின் குடும்பத்தேவைக்காக அறுத்ததாக கணக்கிட்டுக்கொள்ளட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம் - புகாரி, முஸ்லிம்

**அறுக்கும் முறை**

- ஆடு, மாடுகளை படுக்கவைத்து ஒருக்கணித்து அறுக்க வேண்டும், (முஸ்லிம்)
- ஒட்டகத்தை நிற்கவைத்து அறுபடும் நரம்புகள் வெட்டப்படும் அளவுக்கு அறுக்கும் கருவியால் கீறிவிடவேண்டும். (முஸ்லிம்)

அறுக்கும் போது **பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்** என்று கூற வேண்டும். ஆதாரம்: புகாரி

**உழ்ஹிய்யா கொடுக்கப்பட்ட பிராணிகளை பயன்படுத்தும் முறை**

உழ்ஹிய்யா கொடுக்கப்பட்ட பிராணிகளின் முடிகளையோ, தோல்களையோ, மாமிசங்களையோ அறுத்தவருக்கு கூலியாக கொடுக்கக்கூடாது.

குர்பானி கொடுப்பதற்கான ஒட்டகங்களை மேற்பார்வை செய்வதற்கு என்னை நபி (ஸல்) அவர்கள் நியமித்தார்கள், அவைகளின் மாமிசம், தோல், ஆகியவற்றை தர்மமாகவே கொடுக்க வேண்டும் என்றும், அவற்றில் எதையும் அறுப்பவருக்கு கூலியாக கொடுக்கக்கூடாது என்றும் கூறினார்கள், அறுப்பதற்குரிய கூலியை நாங்கள் தனியாகவே கொடுப்போம் என அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஆதாரம்:- புகாரி,முஸ்லிம்

**உழ்ஹிய்யா கொடுப்பவர் செய்யக்கூடாதவைகள்**

துல் ஹஜ் மாதம் பிறந்ததும் உழ்ஹிய்யா கொடுக்க நாடியவர் தன்னுடைய முடி மற்றும் நகத்திலிருந்து எதையும் அகற்றக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் தடைசெய்தார்கள்.

ஆதாரம்:- முஸ்லிம்

**குறிப்பு:- இத்தடை உழ்ஹிய்யா கொடுப்பவருக்கு மாத்திரம்தான், அவரின் குடும்பத்தினருக்கு அல்ல.**

---

# பிரார்த்தனைகள்

பிரார்த்தனையில் சிறந்தது அர.்.பா நாளில் கேட்கும் பிரார்த்தனையாகும். நானும் எனக்கு முன் வந்த நபிமார்களும் கூறிய திக்ருகளில் மிகச்சிறந்தது

لا إِلَهَ إلاالله وَحْدَهُ لا شَرِيْكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ، يُحْيِي وَيُمِيْتُ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْر

**தமிழில்:** லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்க லஹு, லஹுல்முல்க்கு வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷைய்யின் கதீர். என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**பொருள்:** அல்லாஹுவைத்தவிர வணங்கப்படுவதற்குத்தகுதி உள்ள இறைவன் வேறு யாருமில்லை. அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையுமில்லை, ஆட்சி அதிகாரமும் அனைத்துப்புகழும் அவனுக்குரியதே! அல்லாஹுவைத்தவிர வணங்கப்படுவதற்குத் தகுதி உள்ள இறைவன் வேறு யாருமில்லை.

அல்லாஹ்விடத்தில் மிக விருப்பத்திற்குரியது, நான்கு (திக்ருகளாகும்) என ஸஹீஹான ஹதீஸில் வந்துள்ளது.

سُبْحَانَ اللهِ، وَالْحَمْدُ للهِ، وَلاإِلَهَ إلاالله، وَاللهُ أَكْبَر

**தமிழில்:** ஸுப்ஹால்லாஹ், வல்ஹம்து லில்லாஹ், வலாஇலாஹ இல்லல்லாஹ், வல்லாஹு அக்பர்.

**பொருள்:** அல்லாஹ் (சகல குறைகளை விட்டும்) மிகத்தூய்மையானவன், எல்லாப்புகளும் அல்லாஹ்வுக்கே! அல்லாஹுவைத்தவிர வணங்கப்படுவதற்குத்தகுதியுள்ள இறைவன் வேறு யாருமில்லை! அல்லாஹ் மிகப் பெரியவன்!

இந்த திக்ருகளையும் வேறு திக்ருகளையும் உள்ளச்சத்தோடும் பயபக்தியோடும் திரும்பத் திரும்ப அதிகமதிகம் ஓதுவதுடன் உங்களின் ஈருலக வெற்றிக்காகவும் உலக முஸ்லிம்களின் வெற்றிக்காகவும் மனமுருகப் பிரார்த்தியுங்கள். மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட திக்ருகள் துஆக்களை எல்லாக்காலங்களிலும் அதிகமாக ஓத வேண்டும்.

அவைகளில் சில பின்வருமாறு.

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ.

**தமிழில்:** சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அளீம்.

**பொருள்:** அல்லாஹ்வைப் புகழ்வதோடு தூயவன் எனத் துதிக்கவும் செய்கிறேன். கண்ணியமிக்க அல்லாஹ் மிகத்தூய்மையானவன்.

لاإِلَهَ إلا أَنْتَ سُبْحَانَكَ إِنِّيْ كُنْتُ مِنَ الظَّالِمِيْنَ.

**தமிழில்:** லாஇலாஹ இல்லா அன்த சுப்ஹானக இன்னீ குன்து மினல்லாளிமீன்.

**பொருள்:** வணக்கத்திற்குரியவன் உன்னைத்தவிர வேறில்லை. நீயே தூய்மையானவன். நிச்சயமாக நான் அநீதம் இழைத்தோரில் ஒருவனாகிவிட்டேன்.

لاإِلَهَ إلا اللهُ وَلا نَعْبُدُ إلا إِيَّاهُ، لَهُ النِّعْمَةُ وَلَهُ الْفَضْلُ وَلَهُ الثَّنَاءُ الْحَسَنُ، لا إِلَهَ إلا اللهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ.

**தமிழில்:** லாஇலாஹ இல்லல்லாஹு வலா ந.்.புது இல்லா இய்யாஹு, லஹுன்னி.்.மது வலஹுல்.்.பழ்லு வலஹுத்தனாஉல் ஹஸனு, லாஇலாஹ இல்லல்லாஹு முக்லிஸீன லஹுத்தீன வலவ் கரிஹல்கா.்.பிரூன்.

**பொருள்:** வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹுவைத்தவிர வேறில்லை. அவன் ஒருவனைத்தவிர வேறு யாரையும் நாங்கள் வணங்கமாட்டோம்! அருட்கொடைகள் மற்றும் பேருபகாரங்கள் அனைத்தும் அவனுக்கே! அழகிய புகழும் அவனுக்குரியதே! வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹுவைத்தவிர வேறு யாருமில்லை. கீழ்ப்படிதலை அவனுக்கே உரித்தாக்குகிறோம். நிராகரிப்பாளர்கள் வெறுத்தாலும் சரியே!

لا حَوْلَ وَلا قُوَّةَ إلا بِالله

**தமிழில்:** லா ஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹி.

**பொருள்:** நன்மை செய்ய சக்தி பெறுவதும் தீமையை விட்டு விலகுவதும் அல்லாஹ்வின் உதவி கொண்டே தவிர வேறில்லை.

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّار.

**தமிழில்:** ரப்பனா ஆத்தினா .்.பித்துன்யா ஹஸனத்தன் வ.்.பில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினா அதாபன்னார்.

**பொருள்:** எங்கள் இரட்சகனே! எங்களுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக! மேலும் எங்களை நரக வேதனையிலிருந்து பாதுகாத்தருள்வாயாக! (2:201)

உயர்வானவனாகிய அல்லாஹ் (தன் திருமறையில் இவ்வாறு) கூறுகின்றான்.

இன்னும் உங்களுடைய இரட்சகன் கூறுகிறான், நீங்கள் என்னையே அழை(த்துப் பிரார்த்தி)யுங்கள், நான் உங்களு(டைய பிரார்த்தனை)க்கு பதிலளிப்பேன். நிச்சயமாக, என்னை வணங்குவதை விட்டும் பெருமை அடிக்கிறார்களே, அத்தகையோர் அவர்கள் இழிவடைந்தவர்களாய் நரகம் புகுவார்கள். (40:60)

உயர்ந்தவனாகிய உங்களின் இரட்சகன் வெட்கமுள்ளவன், சங்கையானவன் அவனிடம் இருகைகளையும் உயர்த்தினால் (பிரார்த்தித்தால்) அவ்விரண்டையும் வெறுமென திருப்பிவிட அவன் வெட்கப்படுகின்றான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

# வக்ஃபுச் சொத்துக்கள் வளர்ந்ததெப்படி?

### இறைவழிச் செலவுகள்

**1) நாயனின் நேசம் நன்மை புரிவோர்க்கே!**

அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுங்கள்! (உங்களை நீங்களே ஆபத்திற்குள்ளாக்கிக் கொண்டு) உங்களது கரங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள். (பிறருக்கு) நன்மை செய்யுங்கள்! (பிறருக்கு நன்மை செய்வோரை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான்.(2:95)

**2) அந்த நாள் வருமுன் ...?**

விசுவாசம் கொண்டோரே! எந்த விதமான பேரமும், நட்பும், பரிந்துரையும் இல்லாத நாள் வருமுன் உங்களுக்கு நாம் அளித்தவற்றிலிருந்து செலவு செய்யுங்கள். (2:254)

**3) உயர்தரமானதை உயர்ந்தவன் வழியில் ...**

விசுவாசிகளே! நீங்கள் சம்பாதித்தவற்றிலிருந்தும் உங்களுக்கு பூமியிலிருந்து நாம் வெளிப்படுத்தியவற்றிலிருந்தும் நல்லவைகளையே தர்மமாகச் செலவு செய்யுங்கள்!

**4) புண்ணிய வழிச் செலவு!... பூரணமாய் ... கூலி!**

அல்லாஹ்வுடைய பாதையில் நீங்கள் எதைச் செலவு செய்த போதிலும் அதன் கூலி உங்களுக்குப் பூரணமாகவே வழங்கப்படும்.

### வக்புச் சொத்தெழுதும் வரைமுறைகள்

**1) உயர்தரமான தோட்டம்**

உமர்(ரலி) அவர்கள் "தம்ஃக்" என்றழைக்கப்பட்ட தம்முடைய சொத்து ஒன்றை அல்லாஹ்வின் தூதருடைய காலத்தில் தர்மம் செய்தார்கள். அது ஒரு பேரீட்சைத் தோட்டம். அல்லாஹ்வின் தூதரே! நான் பெற்றுள்ள செல்வங்களிலேயே உயர்தரமான "தம்ஃக்" தோட்டத்தைத் தர்மம் செய்திட விரும்புகிறேன் என்றார்கள். நபி(ஸல்) அவர்கள், அதன் நிலத்தை எவருக்கும் விற்கக் கூடாது. அன்பளிப்பாகவும் தரக்கூடாது. அதற்கு எவரும் வாரிசாகவும் முடியாது. அதன் வருவாய் மட்டுமே செலவிடப்படவேண்டும். என்ற நிபந்தனைகளுடன் தர்மம் செய்துவிடு. என்று கூறினார்கள். எனவே உமர்(ரலி) அவர்கள் அதனை தர்மம்(வக்ஃபு) செய்துவிட்டார்கள்.

அது அல்லாஹ்வின் பாதையிலும், அடிமைகளை விடுதலை செய்யவும், வழிப்போக்கர்களுக்காகவும், உறவினர்களுக்காகவும் வழங்கப்பட்டது. நிர்வாகம் செய்பவர் அதிலிருந்து பொது வழக்கப்படி (நியாயமான் முறையில்) உண்பதில், அல்லது விரயம் செய்யாமல் நண்பருக்கு உண்ணக் கொடுப்பதிலும் குற்றமில்லை, என்றும் (அது தொடர்பான ஆவணத்தில்) அவர்கள் குறிப்பிட்டு இருந்தார்கள். அறிவிப்பாளர்: இப்னு உமர்(ரலி), ஆதாரம் : புகாரி

**பள்ளிக்கென ... நிலம் வக்ஃபு**

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் மதீனா நகரத்திற்கு வந்தபோது ... "பள்ளிவாசல் கட்டும்படி" கட்டளையிட்டு விட்டு "பனூ நஜ்ஜார் குலத்தாரே! உங்களுடைய இந்தத் தோட்டத்திற்கு விலை சொல்லுங்கள்" என்றார்கள். அதற்கு அவர்கள் "நாங்கள் விலை கூறமாட்டோம்" அல்லாஹ்வின் மீது ஆணையாக அதன் விலையை நாங்கள் "அல்லாஹ்விடமே எதிர்பார்க்கிறோம்" என்று கூறினார்கள். அறிவிப்பாளர் : அனஸ் பின் மாலிக்(ரலி), ஆதாரம் : புகாரி

**வக்ஃபுக்கென பண முதலீடு**

ஒருவர் ஆயிரம் தீனார் தங்க நாணயங்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்து அதை வியாபாரியான தனது பணியாள் ஒருவரிடம் அதனை முதலீடு செய்து வியாபாரம் செய்யச் சொல்லி அதன் இலாபத்தை ஏழை எளியவர்களுக்கும் உறவினர்களுக்கும் தர்மம் செய்கிறார் இந்த மனிதர் அந்த ஆயிரம் தீனார்களின் வாயிலாகக் கிடைக்கும் இலாபத்திலிருந்து கொஞ்சம் தானும் உண்ணலாமா...? அவர் தர்மத்திற்குரியவர்க்ளைக் குறிப்பிடும் போது ஏழைஎளியவர்களுக்கு தர்மம் செய்யும் படி குறிப்பிடவில்லை என்றாலும் கூட அவருக்கு அதிலிருந்து உண்ண அனுமதியுண்டா? என்று ஸீஹ்ரீ(ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்ட அவர்கள் "அனுமதியில்லை" என்று தீர்ப்பளித்தார்கள். அறிவிப்பாளர் :அனஸ் பின் மாலிக்(ரலி) ஆதாரம் : புகாரி

**குதிரை (வாகனம்) வக்ஃபு**

உமர்(ரலி) தமக்குச் சொந்தமான குதிரை ஒன்றின் மீது ஒரு மனிதரை ஏற்றி அல்லாஹ்வின் பாதையில் (போரிடுவதற்காக தருமம் செய்து) அனுப்பி வைத்தார்கள். அந்தக் குதிரை நபி(ஸல்) அவர்கள் உமர்(ரலி) அவர்களுக்குக் கொடுத்திருந்தார்கள். அந்த மனிதர் அதை விற்பதற்காகச் சந்தையில் நிறுத்தி வைத்திருப்பதாக, உமர்(ரலி) அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே அல்லாஹ்வின் தூதரிடம் அந்தக் குதிரையை தாமே வாங்கிக் கொள்ள (அனுமதி) கேட்டார்கள். நபி(ஸல்) அவர்கள் அதை நீங்கள் வாங்க வேண்டாம். "உங்கள் தருமத்தை ஒரு போதும் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டாம்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : இப்னு உமர்(ரலி), ஆதாரம் : புகாரி

**வீடு வக்ஃபு**

அனஸ்(ரலி) ஒரு வீட்டை வக்ஃபு செய்தார்கள். (மதீனாவிற்கு) வரும் போதெல்லாம் அதில் அவர்கள் தங்குவார்கள். (தானும் பயன்படுத்த உரிமை உண்டு என நிபந்தனையிட்டிருந்ததால்) ஸுபைர்(ரலி) அவர்கள் தம் வீடுகளைத் தர்மம் செய்தார்கள். தமது பெண் மக்களில் விவாகரத்து செய்யப்பட்ட ஒரவருக்கு "நீ இதில் தீங்கிழைக்காமலும், தீங்குக்கு ஆளாகமலும் தங்கலாம். மறுமணம் செய்து தன்னிறைவு பெற்று விட்டால் இதில் தங்க அனுமதியில்லை" என நிபந்தனை விதித்தனர்.

அறிவிப்பாளர் : இப்னு உமர்(ரலி), புகாரி

**கிணறு மற்றும் போர் நிதி வக்ஃபு**

யார் "ரூமா" என்னும் கிணற்றை (விலைக்கு வாங்கி) தூர் வாரி (பொது மக்கள் நலனுக்காக வக்ஃபு செய்து) விடுகிறாரோ அவருக்கு சுவனம் கிடைக்கும். என அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூற, உஸ்மான்(ரலி) அவர்கள் அதை விலைக்கு வாங்கி தூர் வாரி வக்ஃபாக ஆக்கினார்கள். அறிவிப்பாளர் : அபூ அப்திர் ரஹ்மான்(ரலி), ஆதாரம் : புகாரி

**போர்நிதி வக்ஃபு**

எவர் பொருளாதார நெருக்கடியிலிருக்கும் (தபூக் போருக்கான) படையை (பொருளுதவி செய்து) தயார் படுத்துகின்றாரோ அவருக்கு சுவனம் கிடைக்கும் என நபி(ஸல்) அவர்கள் கூற, உஸ்மான்(ரலி) அவர்கள் (பொருளுதவி செய்து) அப்படையைத் தயார் செய்ய உதவினார்கள். அறிவிப்பாளர்: அபூ அப்திர்ரஹ்மான், ஆதாரம் : புகாரி

**வக்ஃபு நிர்வாகமுறை**

உமர்(ரலி) அவர்கள் "வக்ஃபு" செய்த போது "இதை நிர்வாகம் செய்பவர் இதிலிருந்து(எடுத்து) உண்பதில் தவறில்லை" எனக் குறிப்பிட்டார்கள். "வக்ஃபு" செய்தவரே கூட அதை நிர்வாகமும் செய்யலம். மற்றவர்களும் அதற்கு நிர்வாகியாக இருக்கலாம், ஆக (அதை) நிர்வகிக்கும் எவருக்கும் அதிலிருந்து உண்ண அனுமதியுண்டு. அறிவிப்பாளர் : அபூ அப்திர்ரஹ்மான், ஆதாரம்: புகாரி

**தொகுப்பு : அதிரை உமர்**

(8 ம் பக்கத் தொடர்ச்சி)...எய்ட்ஸ்..

எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வுகள் உலகம் முழுவதிலும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 1 அன்று எய்ட்ஸ் டே என்று அறிவித்து பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுதான் வருகின்றன. தமிழ்நாட்டில் மட்டும் 2,53,000 பேர் எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எத்தனைதான் எய்டஸ் பற்றி விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும் சமய சந்தர்ப்பத்தில் சபலத்தில் வீழ்ந்த மனிதன் சுலபமாக எய்ட்ஸை விலைக்கு வாங்கிக் கொள்கிறான்.

இதற்குத் தீர்வாக இஸ்லாம் கூறும் உண்மையோ அனைவரும் ஏற்கும் வண்ணமாகவே இருக்கிறது.

நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள் நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும், (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது. (17:32)

(நபியே!) மு∴மின்களான ஆடவர்களுக்கு நீர் கூறுவீராக் அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும் அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும் நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கு தெரிந்தவன் (24:30)

**தொகுப்பு : அப்துல் மாலிக்**

## தொழுகையை விடுவதினால் கிடைக்கும் தண்டனை

சுவன வாசிகள் குற்றவாளியிடம் கேட்பார்கள் உங்களை சகர் என்ற நரகத்தில் நுழையவைத்தது எது? (என்று) அதற்கவர்கள் கூறுவார்கள், தொழுபவர்களில் நின்றும் நாங்கள் இருக்கவில்லை.
அல் முத்தஸ்ஸிர் 40-43

1. நிச்சயமாக ஒருமனிதனுக்கும் ஷிர்க்கும், கு∴ப்ருக்கும் மத்தியிலுள்ள வித்தியாசம் தொழுகையை விடுவதுதான் என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி)- ஆதாரம் : முஸ்லிம்

2. எங்களுக்கும் அவர்களுக்கும் மத்தியிலுள்ள உடன்படிக்கை தொழுகைதான். அதை (தொழுகையை) யார் விட்டுவிடுகின்றாரோ நிச்சயமாக அவர் கா∴பிராகிவிட்டார் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : புரைதா (ரலி) - ஆதாரம் : திர்மிதி

3. தொழுகையைத்தவிர மார்க்க விஷயத்தில் எதை விடுவதினாலும் ஒருவன் கா∴பிராகிவிடுவான் என்று நபித்தோழர்கள் முடிவெடுக்கவில்லை.
அறிவிப்பவர் : ஷகீக் இப்னு அப்துல்லாஹ் - ஆதாரம் : திர்மிதி

4. யார் தொழுகையை பாதுகாத்து (தொழுகின்றாரோ) அது அவருக்கு மறுமையில் ஒளியாகவும், அத்தாட்சியாகவும், பாதுகாக்கக் கூடியதாகவும் ஆகிவிடும். யார் தொழுகையை பாதுகாத்து (தொழவில்லையோ)அது அவருக்கு ஒளியாகவோ, அத்தாட்சியாகவோ, பாதுகாப்பாகவோ இருக்காது. இன்னும் அவன் மறுமையில் காரூன், ∴பிர்அவ்ன், ஹாமான், உபை இப்னு கல∴போடு எழுப்பப்படுவான் என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் :- அப்துல்லாஹ் இப்னு அம்று இப்னுல் ஆஸ் (ரலி) - ஆதாரம் :- அஹ்மத், தப்ராணி

## ஜமாஅத்தோடு தொழும் தொழுகையின் சிறப்பு

1. நபி (ஸல்) அவர்களிடம் கண்தெரியாத ஒரு மனிதர் வந்து , அல்லாஹ்வின் தூதரே! என்னை பள்ளிக்கு அழைத்து வருவதற்கு யாருமில்லை (என்று சொல்லி) வீட்டில்(தனிமையில்) தொழுவதற்கு அனுமதி கேட்டார்கள், நபியவர்களும் அனுமதி கொடுத்து விட்டார்கள். அந்த மனிதர் திரும்பி செல்லும் போது அவரை அழைத்து பாங்கு சப்தம் கேட்கின்றதா? என வினவினார்கள், அதற்கு அவர் ஆம் என்றார். அப்படியானால் தொழுகைக்கு (பள்ளிக்கு) வந்தேயாகவேண்டுமென்றார்கள்.
அறிவிப்பவர் :- அபூ ஹுரைரா (ரலி) - ஆதாரம் :-முஸ்லிம்

2. ஜமாஅத்தோடு தொழும் தொழுகை தனிமையில் தொழும் தொழுகையை விட இருபத்தி ஏழு மடங்கு சிறந்தது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் :-அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி)
ஆதாரம் :- புகாரி, முஸ்லிம்

## ஆரம்ப வரிசையில் தொழுவதின் சிறப்பு

பாங்கு சொல்வதிலும், முந்திய வரிசையில் (தொழுவதிலும்) கிடைக்கும் நன்மையை மனிதர்கள் அறிந்து கொண்டால், சீட்டுப்போட்டுத்தான் முதல் வரிசையில் இடம் கிடைக்குமென்றிருப்பினும் சீட்டுப்போட்டாவது அதை அடைந்து கொள்ள முயற்சிப்பார்கள் என்று நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் :-ஜாபிர் (ரலி) - ஆதாரம் :- முஸ்லிம்

## சுன்னத்து தொழுகைகளின் சிறப்பு

ஒவ்வொரு நாளைக்கும் யார் 12 ரக்அத் சுன்னத்து தொழுகை தொழுகின்றாரோ அவருக்கு அல்லாஹ் சுவர்க்கத்தில் ஒரு மாளிகையை கட்டுகின்றான் என்று நபி (ஸல்) அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கின்றேன் என்று உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.
ஆதாரம் :-முஸ்லிம்

## 12 ரக்அத்துக்களின் விபரங்கள் பின்வருமாறு

ஸுப்ஹுக்கு முன் இரண்டு ரக்அத், லுஹருக்கு முன் நான்கு ரக்அத், லுஹருக்கு பின் இரண்டு ரக்அத், ம∴ரிபுக்கு பின் இரண்டு ரக்அத், இஷாவுக்கு பின் இரண்டு ரக்அத்

குறிப்பு :- இவைகளுக்கு சுன்னத்துல் முஅக்கதா என்று சொல்லப்படும், அதாவது நபியவர்கள் விடாமல் தொழுது வந்த சுன்னத்து தொழுகைகள். இன்னும் இது அல்லாத முன் பின் சுன்னத்துக்கள் உள்ளன என்பதை கவனத்தில் வைத்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் நம்அனைவருக்கும தொழுகையையயும், மற்ற எல்லா வணக்கங்களையும் பேணி நடக்க வாய்ப்பளிப்பானாக,

# ஃபத்வாக்கள் (மார்க்கத் தீர்ப்புகள்)

## *ஹஜ் சிறப்பிதழ்*

1- **கேள்வி:** ஆகாய மார்க்கமாய் வெளிநாட்டிலிருந்து ஹஜ்ஜுக்கு வரக்கூடியவர்கள் ஜித்தாவிலிருந்து இஹ்ராமிற்காக நிய்யத்து வைக்கலாம் என சிலர் தீர்ப்புக் கூறுகின்றனர். வேறு சிலரோ (அது கூடாது என) மறுக்கின்றனர். இவ்விரண்டிலும் எது சரியென எங்களுக்கு மார்க்கத் தீர்ப்பு கூறுங்கள். அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி வழங்குவானாக!

**பதில்:** தரை, கடல் மற்றும் ஆகாய மார்க்கமாக வரக்கூடிய எல்லா ஹாஜிகளும் அவர்களுக்கென்று தரையில் விதிக்கப்பட்ட மீகாத்திலிருந்தோ அல்லது அதற்கு நேராக வரும்போதோ இஹ்ராமிற்காக நிய்யத்து வைப்பது அவசியமாகும். மீகாத்தை நிர்ணயிக்கும் போது இவ்வாறுதான் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அந்தந்த எல்லைகள்) ஹஜ், உம்ரா நோக்கத்தோடு அவ்வப்பகுதிகளிலிருந்து வரக்கூடிய மக்களுக்கும், அந்த வழியாக வரக்கூடிய அந்தப் பகுதியில் வசிக்காதவர்களுக்கும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**ஆதாரம்: புகாரி,முஸ்லிம்**

ஜித்தா நகரம், வெளியில் இருந்து வருபவர்களுக்கு இஹ்ராமிற்காக நிய்யத்து வைக்கும் எல்லையல்ல. யார் ஜித்தாவில் வசிக்கிறார்களோ அவர்களுக்கும் இன்னும் ஹஜ் உம்ரா நோக்கமில்லாமல் ஜித்தா வந்து, பின்பு ஹஜ் உம்ரா செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டவர்களுக்கும் மட்டுமே! (ஜித்தாவிலிருந்து இஹ்ராமிற்காக நிய்யத்து வைக்கலாம்) இதுதான் அவர்களுக்குரிய எல்லையாகும்.

(அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ், அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக!)

2- **கேள்வி:** ஒருவர் தனக்கு ஹஜ் செய்வதாக நிய்யத்து வைத்துவிட்டார். பின்பு தன் சொந்தக்காரர் ஒருவருக்காக அந்த ஹஜ்ஜைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டால், சொந்தக்காரருக்காக அந்த நிய்யத்தை மாற்றமுடியுமா? முன்பு ஹஜ்ஜு செய்த ஒருவர் (மீண்டும் ஒரு முறை) தனக்கு ஹஜ்ஜு செய்வதற்கு நிய்யத்து வைத்து, அரஃபாவில் இருக்கும்போது அந்த ஹஜ்ஜை தன் சொந்தக்காரர் ஒருவருக்காக செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டால், தன் சொந்தக்காரருக்காக அந்த நிய்யத்தை மாற்றுவதின் சட்டம் என்ன? அப்படி நிய்யத்தை மாற்றுவது கூடுமா? கூடாதா?

**பதில்:** ஒருவர் தனக்கு ஹஜ்ஜு செய்வதாக நிய்யத்து வைத்துவிட்டால் (மக்கா) செல்லும் வழியிலோ அல்லது அரஃபாவில் வைத்தோ அல்லது வேறு எங்கு வைத்தோ, இன்னும் ஒருவருக்கு அந்த நிய்யத்தை மாற்றுவதற்கு அனுமதியில்லை. தன் தந்தைக்கோ அல்லது தாய்க்கோ அல்லது அவ்விருவருமல்லாத வேறு யாருக்கோ மாற்றக் கூடாது. மாறாக தனக்காக அந்த ஹஜ்ஜை நிறைவு செய்வது அவருக்கு அவசியமாகும். அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

ஹஜ்ஜையும் உம்ராவையும் அல்லாஹ்விற்காக, பரிபூரணப் படுத்துங்கள். (2:196)

தனக்காக நிய்யத்து வைத்தால் அதை தனக்காக நிறைவு செய்வது அவசியமாகும். பிறருக்கு ஹஜ் செய்வதாக நிய்யத்து வைத்தால், அதை பிறருக்காக நிறைவு செய்வது அவசியமாகும். இஹ்ராமிற்கு நிய்யத்து வைத்த பின் அதை (மற்றொருவருக்கு) மாற்றுவது கூடாது. இதற்கு முன் அவர் ஹஜ்ஜு செய்திருந்தாலும் சரியே!

(அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ், அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக!)

3- **கேள்வி:** நம்பிக்கையான ஒருவரிடம் பணம் கொடுத்து தனக்காக ஹஜ்ஜு செய்யும்படி கூறிய நிலையில் என் தாய் மரணித்து விட்டார். அப்போது நான் சிறிய வயதுள்ளவராக இருந்தேன். என் தந்தையும் மரணித்துவிட்டார். அவ்விருவரைப் பற்றியும் எனக்கு (எதுவும்) தெரியாது. எனது தந்தை ஹஜ்ஜு செய்ததாக என்னுடைய சில சொந்தக்காரர்கள் மூலம் நான் தெரிந்து கொண்டேன். ஒருவருக்கு பணம் கொடுத்து என் தாய்க்கு ஹஜ்ஜு செய்ய வைப்பது கூடுமா? அல்லது அவ்விருவருக்கும் நான் தான் ஹஜ்ஜு செய்ய வேண்டுமென்பது அவசியமா? என் தந்தை ஹஜ்ஜு செய்தார் என்று கேள்விப்பட்ட பின்பும் அவருக்காக நான் ஹஜ்ஜு செய்ய வேண்டுமா?

**பதில்:** மார்க்கம் காட்டித்தந்த முறைப்பிரகாரம் ஹஜ்ஜை முழுமைபடுத்தி உன் தாய் தந்தையருக்காக நீர் ஹஜ்ஜு செய்வதே சிறந்த முறையாகும். மார்க்கப்பற்றுள்ள நம்பிக்கைக்குரிய ஒருவருக்குப் பணம் கொடுத்து அவ்விருவருக்கும் ஹஜ்ஜு செய்ய வைத்தால் அதில் குற்றமில்லை. அவ்விருவருக்கும் நீர் ஹஜ்ஜு உம்ரா செய்வதே சிறந்த முறையாகும். யாரை அவ்விருவருக்கும் ஹஜ்ஜு உம்ரா செய்வதற்கு பகரமாக்குகின்றாயோ அவரிடம் என் தாய்க்கும் தந்தைக்கும் ஹஜ்ஜு உம்ராச் செய்ய வேண்டுமென்று ஏவ வேண்டும். இது அவ்விருவருக்குச் செய்யும் உதவியாகும். எங்களின் அமல்களையும், உங்களின் அமல்களையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக!

(அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ், அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக!)

4- **கேள்வி:** ஹஜ்ஜு செய்வதற்காக வந்த ஒரு பெண் ஹஜ்ஜுக்கடமைகள் அனைத்தயும் தானாகவே நிறைவேற்றினாள். தன்னுடன் சிறிய குழந்தை இருப்பதால் கல் எறிவதற்கு (மாத்திரம்) இன்னொருவரைப் பொறுப்புச்சாட்டி இருந்தாள். இதனுடைய மார்க்க சட்டம் என்ன? இது அவளுடைய பர்ளான ஹஜ்ஜு என்பது குறிப்பிடத்தக்கது.

**பதில்:** (இன்னொருவரை கல் எறிய சாட்டியதால்) அப்பெண் மீது எந்தக்குற்றமும் இல்லை. கல் எறியக்கூடிய நேரத்தில் ஏற்படக்கூடிய நெருக்கத்தினால் பெண்களுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருப்பதாலும், குறிப்பாக அவளுடன் பிள்ளை இருப்பதாலும் பொறுப்புச் சாட்டியவர் எறிந்த கல்லே அவளுடைய ஹஜ்ஜுக்குப் போதுமானதாகும்.

(அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ், அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக!)

5- **கேள்வி:** உயிரோடு இருக்கக்கூடிய ஒருவர், தனக்கு ஹஜ்ஜு செய்யும்படி இன்னொருவரிடம் வஸிய்யத்துச் செய்யலாமா?

**பதில்:** (தனக்கு ஹஜ் செய்யும்படி) வஸிய்யத்துக் கூறியவர் அல்லது பொறுப்புக் கொடுத்தவர், முதுமை அல்லது தீராத நோயுள்ளவராக இருந்தால் (அவர் உயிருடன் இருக்கும் போதே) இனனொருவர் அவருக்காக ஹஜ்ஜு செய்வதில் தவறில்லை. இதற்கு ஆதாரம் இருக்கின்றது.

என் தந்தை ஹஜ்ஜு செய்வதற்கும் வாகனத்தில் அமர்வதற்கும் சக்திபெற்றவரல்ல என ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் முறையிட்டபோது (நீ உன் தந்தைக்கு ஹஜ்ஜும் உம்ராவும்

செய்து கொள்) என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"கத்அமிய்யா" கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண் (நபி(ஸல்) அவர்களிடத்தில் வந்து) அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கு உடல்வலிமை இல்லாத நேரத்தில், என் தந்தைக்கு ஹஜ் கடமையாகிவிட்டது எனக் கூறினார். (அப்போது) நீர் உன் தந்தைக்கு ஹஜ்ஜு செய்வீராக என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ், அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக!)

6- **கேள்வி**: ஒருவர் தனக்கு ஹஜ்ஜு செய்யும்படி வஸிய்யத்துச் செய்யாமல் மரணித்து, அவருடைய மகன் அவருக்கு ஹஜ்ஜு செய்தால், அவருடைய கடமை நீங்கிவிடுமா?

**பதில்:** தன்னுடைய ஹஜ்ஜை நிறைவேற்றிய முஸ்லிமான அவருடைய மகன், தன் தந்தைக்காக ஹஜ் செய்தால் தந்தையின் (ஹஜ்ஜுக்) கடமை நீங்கிவிடும். இவ்வாறுதான் அவருடைய மகன் அல்லாத தன்னுடைய ஹஜ்ஜை நிறைவேற்றிய வேறு எந்த முஸ்லிம் செய்தாலும் அவருடைய (ஹஜ்ஜுக்) கடமை நீங்கிவிடும்.

ஒரு பெண் (நபி(ஸல்) அவர்களிடம் வந்து) அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ் தன் அடியார்களுக்கு விதித்த ஹஜ்ஜுக்கடமை என் தந்தையின் முதுமை வயதில் அவருக்கு கடமையாகிவிட்டது. அவரால் ஹஜ்ஜு செய்யவோ வாகனத்தில் அமரவோ முடியாதே! நான் அவருக்காக ஹஜ்ஜு செய்யலாமா எனக் கேட்டார்கள். ஆம் (உன் தந்தைக்கு நீர் ஹஜ்ஜை நிறைவேற்றுவாயாக) என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி)**

**ஆதாரம்: புகாரி,முஸ்லிம்**

(அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ், அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக!)

7- **கேள்வி**: ஹஜ்ஜு செய்யக்கூடியவர், ஹஜ்ஜுடைய ஸஃயை தவாஃபுல் இஃபாலாவை விட முற்படுத்திச் செய்வது கூடுமா?

**பதில்**: இஃப்ராத் மற்றும் கிரானான முறையில் ஹஜ்ஜு செய்பவர்கள் ஹஜ்ஜுடைய ஸஃயியை தவாஃபுல் இஃபாலாவை விட முற்படுத்தி செய்வதற்கு அனுமதி இருக்கின்றது. (அதாவது) அவ்விருவரும் தவாஃபுல் குதூமுக்குப் பின் அதைச் செய்திருப்பார்கள். இவ்வாறுதான் நபி(ஸல்)அவர்களும், குர்பானியை தன்னுடன் கொண்டு வந்த நபித் தோழர்களும் செய்தார்கள். தமத்துஆன முறையில் ஹஜ்ஜு செய்பவர் இரண்டு ஸஃயி செய்ய வேண்டும். முதலாவது மக்கா வந்ததும் உம்ராவுடன் செய்யும் ஸஃயி. இரண்டாவது ஹஜ்ஜில் செய்யும் ஸஃயாகும். இந்த ஸஃயியை தவாஃபுல் இஃபாலாவுக்குப்பின் செய்வதே சிறந்ததாகும். காரணம் ஸஃயி தவாஃபுக்குப் பின் வரக்கூடியதாகும். தவாஃபுல் இஃபாலாவைவிட ஸஃயியை முற்படுத்திச் செய்தாலும் (மார்க்க அறிஞர்களின்) சரியான தீர்ப்பின்படி எந்தக் குற்றமும் இல்லை. ஏனென்றால், தவாஃபு(ல் இஃபாலாவை) செய்வதற்கு முன் ஸஃயி செய்து விட்டேன் என்பதாக நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது, அதனால் எந்ததவறுமில்லை எனக் கூறினார்கள். ஹஜ் செய்பவர் பெருநாள் தினத்தில் (துல்ஹஜ் பிறை 10ம் நாளில்) ஹஜ்ஜின் ஐந்து கிரியைகளைத் தொடராகச் செய்ய வேண்டும். (முதலாவது) ஜம்ரத்துல் அகபாவிற்குக் கல் எறிவது (இரண்டாவது) குர்பானி கொடுப்பது (மூன்றாவது) தலையை மொட்டை அடிப்பது அல்லது தலைமுடியை குறைப்பது (நான்காவது) தவாஃபு (ல் இஃபாலா) செய்வது, (ஐந்தாவது) ஸஃபா மர்வாவுக்கு மத்தியில் ஸஃயி செய்வது. கிரான் மற்றும் இஃப்ராதாக ஹஜ்ஜு செய்பவர் தவாஃபுல் குதூமுக்குப்பின் ஸஃயி செய்திருப்பார். (இந்த ஐந்து) கிரியைகளையும் நாம் சொன்ன முறைப்படி செய்வதே சிறந்த முறையாகும். (நாம் சொன்ன முறையிலன்றி) அதற்குரிய தேவை (சூழலின் நிர்பந்தம்) ஏற்படும் போது ஒன்றைவிட மற்றொன்றை முற்படுத்திச் செய்வதில் தவறேதுமில்லை. இது உயர்ந்தவனாகிய அல்லாஹ்வின் அருளும் மார்க்கத்தை (தன் அடியார்களுக்கு) இலகுபடுத்தியதுமாகும். உலகத்தின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்.

(முஹம்மது இப்னு உதைமீன், அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக!)

8- **கேள்வி**: தன்னுடைய உம்ராவை முடித்தபின், மக்காவிலுள்ள தன்யீம் என்ற இடத்திலிருந்து, தன் தந்தைக்காக இஹ்ராம் அணிந்து நிய்யத்து வைத்து உம்ராச் செய்தால், அந்த உம்ரா கூடுமா? அல்லது அவருக்குரிய மீகாத்திலிருந்துதான் இஹ்ராத்திற்காக நிய்யத்து வைக்க வேண்டுமா?

**பதில்:** உமது உம்ராவை முடித்து, அதிலிருந்து விடுபட்டபின் மரணித்த அல்லது முடியாத தன் தந்தைக்காக உம்ரா செய்ய நினைத்தால் ஹரமின் எல்லைக்கு வெளியில் தன்ஈம் போன்ற இடத்திற்க்குச் சென்று அங்கிருந்து உம்ராவிற்காக நிய்யத்து வைக்கலாம். மீகாத்துக்குச் செல்லவேண்டுமென்ற அவசியமில்லை.

(மார்க்கத் தீர்ப்பு மற்றும் அறிவுப்பூர்வமான ஆராய்ச்சிகளுக்குரிய நிரந்தரக் குழு)

**9- கேள்வி:** இஹ்ராத்திற்காக நிய்யத்து வைக்கும் போது, நாவினால் மொழிவது கூடுமா?

**பதில்:** ஹஜ்ஜு, உம்ரா தவிர பிற வணக்கங்களில் (உள்ளத்தால்) நிய்யத்து வைத்ததை நாவினால் மொழிவதற்கு மார்க்கம் ஒரு முஸ்லிமுக்கு அனுமதிக்கவில்லை. இஹ்ராமிற்காக நிய்யத்து வைக்கும்போது மாத்திரம், நிய்யத்தை நாவினால் மொழிவதற்கு அனுமதி இருக்கின்றது. காரணம் நபி(ஸல்) அவர்கள் அப்படிச் செய்திருக்கின்றார்கள். தொழுகை தவாஃப் இவைகளுக்காக வைக்கும் நிய்யத்தை நாவினால் மொழியாமல் உள்ளத்தால் மட்டுமே நினைப்பது அவசியமாகும். நான் இவ்வாறு இவ்வாறெல்லாம் தொழுவதற்கு, தவாஃப் செய்வதற்கு நிய்யத்து வைத்திருக்கின்றேன் என்று நாவினால் மொழியக்கூடாது. மாறாக, அப்படிக் கூறுவது (இஸ்லாத்தில்) புதிதாக ஏற்படுத்தப்பட்ட பித்அத்துக்களைச் சேர்ந்ததாகும். மேலும் அதனைச் சத்தமாகக் கூறுவது மிக மோசமான செயலும் பெரும் குற்றமுமாகும். நிய்யத்தை நாவினால் மொழிவது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்றாக இருந்திருந்தால் நபி(ஸல்) அவர்கள் தன் உம்மத்தினருக்கு, தனது செயலினால், சொல்லினால் அதனைத் தெளிவுபடுத்தி, விளக்கியிருப்பார்கள். மேலும் முன் சென்ற நல்லடியார்கள் அதனைச் செய்தும் காட்டியிருப்பார்கள்.

நபி(ஸல்) அவர்களும் நபித்தோழர்களும் அப்படிச் செய்தார்கள் என்ற, எந்த ஒரு ஆதாரப்பூர்வ அறிவிப்பும் இல்லாததினால், அப்படிச் செய்வது பித்அத்தைச் சேர்ந்தது என்பதைத் தெளிவு படுத்துகின்றது.

காரியங்களில் கெட்டது (இஸ்லாத்தில்) புதிதாக உருவாக்கப்பட்டவைகளாகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம்: முஸ்லிம்

நமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை, புதிதாக

ஆரம்பிக்கின்றாரோ அது (அல்லாஹ்விடத்தில்) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**ஆதாரம்: புகாரி,முஸ்லிம்**

மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யார் (புதிதாக) செய்கின்றாரோ அது (அல்லாஹ்விடத்தில்) ஏற்றுக் கொள்ளப்படமாட்டது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: முஸ்லிம்

(அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ், அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக!)

10- **கேள்வி:** மக்காவிலிருந்து தன் தாயகம் செல்வதற்கு சற்றுமுன், தவா.ஃபுல் இ.ஃபாலாவுடன் சேர்த்து தவா.ஃபுல் விதாவையும் செய்தால் கூடுமா?

**பதில்:** அப்படிச் செய்வதில் தவறேதுமில்லை. ஒருவர் ஜம்ராக்களுக்குக் கல் எறிந்து (அவர் செய்யவேண்டிய) எல்லாக் காரியங்களையும் முடித்து, பிரயாணத்துக்குரிய ஏற்பாடுகளைச் செய்யும்வரை தவா.ஃபுல் இ.ஃபாலாவைப் பிற்படுத்தினால் (தவா.ஃபுல் இ.ஃபாலாவைச் செய்தவுடன் மக்காவை விட்டும் புறப்பட்டால்) தவா.ஃபுல் இ.ஃபாலாவே தவா.ஃபுல் விதாவுக்கும் போதுமானதாகிவிடும். எனினும் தவா.ஃபுல் இ.ஃபாலாவையும் தவா.ஃபுல் விதாவையும் (தனித்தனியே) செய்வதே மிகவும் நல்லது. ஒரு தவாஃ.பக் கொண்டு போதுமாக்கி தவா.ஃபுல் விதாவை நிய்யத்து வைத்தாலோ அல்லது ஒரு தவாஃ.பச் செய்து இரண்டையும் (தவா.ஃபுல் இ.ஃபாலா மற்றும் தவா.ஃபுல் விதாவை) நிய்யத்து வைத்தாலோ போதுமானதாகும்.

(அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ், அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக!)

11- **கேள்வி:** நான் ஜித்தா நகரில் வசிப்பவன், ஏழு முறை ஹஜ்ஜை நிறைவேற்றி இருக்கின்றேன். ஜித்தாவில் வசிப்பவர்களுக்கு தவா.ஃபுல் விதா செய்யத் தேவையில்லை என்று சிலர் கூறியதால் (ஏழு முறையும்) நான் தவா.ஃபுல் விதாச் செய்யவில்லை. நான் செய்த முறை சரியானதா? அல்லது இல்லையா? எனக்கு விளக்கமளியுங்கள், அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி வழங்குவானாக!.

**பதில்:** ஜித்தா தாயிப் மற்றும் இதுபோன்ற ஊர்களில் வசிப்பவர்கள் தவா.ஃபுல் விதாவை நிறைவேற்றாமல் ஹஜ்ஜை முடித்துவிட்டுச் செல்லக்கூடாது.

உங்களுடைய கடைசி அமல் அல்லாஹ்வின் ஆலயத்தோடு இல்லாமல் (தவா.ஃபுல் விதா இல்லாமல்) நீங்கள் யாரும் (மக்காவைவிட்டும்) செல்லக்கூடாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாரம்: முஸ்லிம்

இது எல்லா ஹாஜிகளுக்கும் நபி(ஸல்) அவர்கள் கூறிய பொது அறிவிப்பாகும். (ஆகவே ஜித்தாவாசிகளும் இதில் அடங்குவார்கள்)

அவர்களின் (ஹாஜிகளின்) கடைசி அமல் அல்லாஹ்வின் ஆலயத்தோடு (தவா.ஃபுல் விதாவாக) இருக்கட்டும் என மக்கள் ஏவப்பட்டார்கள். என்றாலும் மாதவிடாய்ப் பெண்களுக்கு (அதைச் செய்யாமல் விடுவதற்கு) அனுமதிக்கப்பட்டது என அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) கூறினார்கள்.

**ஆதாரம்: புகாரி,முஸ்லிம்**

தவா.ஃபுல் விதாவை விட்டவர், அல்லாஹ்விடத்தில் தவ்பா மற்றும் பிழைபொறுப்புத்தேடி இது போன்ற தவறை மீண்டும் செய்யமாட்டேன் என்ற உறுதியுடன், அதற்கு ஒரு பரிகாரமும் செய்ய வேண்டும். அதாவது ஏழு பேர் சேர்ந்து ஓர் ஒட்டகம் அல்லது ஒரு மாடு அல்லது ஒருவருக்கு ஓர் ஆடு அறுத்து மக்காவிலுள்ள ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும். சாதாரண நாட்டு ஆடாக இருந்தால் இரண்டு வருடம் பூர்த்தியானதாக இருக்க வேண்டும். செம்மறி ஆடாக இருந்தால் நான்கு வருடம் பூர்த்தியாகி ஐந்தாம் வருடத்தில் நுழைந்திருக்க வேண்டும்.

(அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ், அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக!)

12- **கேள்வி:** உதாரணத்திற்கு, ஒருவர் தவா.ஃபுடைய ஐந்தாவது சுற்றில் இருக்கும்போது ஐந்தாவது சுற்றை முடிப்பதற்கு முன் தொழுகைக்கு இகாமத்து சொல்லப்பட்டு (இமாமுடன்) தொழுகையை நிறைவேற்றியபின், விடுபட்ட இடத்திலிருந்து ஆரம்பித்து ஐந்தாவது சுற்றை முடிக்க வேண்டுமா? அல்லது அந்த சுற்றை கணக்கெடுக்காமல் திரும்பவும் ஹஜருல் அஸ்வத் கல்லிலிருந்து ஐந்தாவது சுற்றை ஆரம்பிக்க வேண்டுமா?

**பதில்:** இப்படிப்பட்ட நிலையில் அந்த சுற்றை கணக்கெடுப்பதே சரியான முறையாகும். இமாமுடன் சேர்ந்து தொழுவதற்காக தவாஃ.ப எந்த இடத்தில் நிறுத்தினாரோ, அங்கிருந்தே அந்தச் சுற்றைத் தொடர வேண்டும்.

அல்லாஹ்வே நல் வாய்ப்புக்களைத் தரக்கூடியவன். நமது தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தார் தோழர்கள் மீதும் அல்லாஹ்வின் அருளும் கிருபையும் உண்டாவதாக!

(மார்க்கத் தீர்ப்பு மற்றும் அறிவுப்பூர்வமான ஆராய்ச்சிகளுக்குரிய நிரந்தரக்குழு)

13- **கேள்வி:** நாங்கள் ஆஸ்திரேலியாவில் வாழுகின்றோம். இந்த வருடம் ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு பெரும் கூட்டம் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்ற நாடி இருக்கிறார்கள். உதாரணத்திற்கு சிட்னி என்னுமிடத்திலிருந்து பிரயாணத்தைத் துவங்குகிறோம், எங்களுக்குரிய முதல் விமானநிலையம் ஜித்தா, அபுதாபி, பஹ்ரைன் இம்மூன்றில் ஒன்றாகும். நாங்கள் இஹ்ராமிற்காக நிய்யத்து வைக்கும் எல்லை எங்கே? சிட்னியிலிருந்தே நாங்கள் இஹ்ராமிற்காக நிய்யத்து வைக்க வேண்டுமா? அல்லது வேறு இடத்திலிருந்தா? விடையை கூறும்படி தயவுடன் வேண்டிக் கொள்கிறோம். உங்களுக்கு மிகவும் நன்றி.

**பதில்:** சிட்னி அபுதாபி, பஹ்ரைன் அல்லது ஜித்தா இவைகள் உங்களை போன்றவர்களுக்கு ஹஜ்ஜு உம்ராவிற்கு நிய்யத்து வைக்கும் எல்லையல்ல. சொல்லப்பட்ட இடங்கள் அங்கு வசிப்பவர்களுக்குரிய எல்லையாகும். நீங்கள் ஆகாய மார்க்கமாக மக்காவுக்கு பிரயாணம் செய்தால், நீங்கள் முதலில் கடக்கும் மீகாத்திலிருந்து இஹ்ராமிற்காக நிய்யத்து வைப்பது அவசியமாகும். இஹ்ராமிற்கு நிய்யத்து வைக்கும் எல்லைகளை நிர்ணயிக்கும் போது நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

(அந்தந்த எல்லைகள்) அவ்வப்பகுதிகளிலிருந்து ஹஜ்ஜு உம்ரா நோக்கத்தோடு வரக்கூடிய மக்களுக்கும் அந்த வழியாக வரக்கூடிய அப்பகுதியில் வசிக்காதவர்களுக்கும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: புகாரி,முஸ்லிம்

உங்களுக்குரிய எல்லையைக் கடப்பதற்குமுன் (நீங்கள் பிரயாணம் செய்யக்கூடிய) விமானத்தில் பணிபுரிபவர்களிடம் உங்களுக்குரிய எல்லையைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இஹ்ராமிற்குரிய நிய்யத்தை வைக்காமல் மீக்காத்தை கடந்துவிடுவோமோ என்ற பயத்தில் உங்களுக்குரிய மீக்காத்தை அடைவதற்கு முன்பே, இஹ்ராமிற்குரிய நிய்யத்தை வைத்து தல்பியா கூறுவதில் தவறேதுமில்லை. ஆனால் இஹ்ராமிற்கு நிய்யத்து வைப்பதற்காக உடல் சுத்தம் செய்தல், குளிப்பு, மற்றும் இஹ்ராமிற்குரிய உடை அணிதல்

இவைகளை எந்த இடத்திலும் செய்யலாம்.
(மார்க்கத் தீர்ப்பு மற்றும் அறிவுப்பூர்வமான ஆராய்ச்சிகளுக்குரிய நிரந்தரக்குழு)

14- **கேள்வி:** மக்கா, மினா, முஸ்தலி∴பா, அர∴பா போன்ற புனித இடங்களிலிருந்து மிக தூரமான இடத்தில் வசிப்பவர், கிரானான முறையில் ஹஜ்ஜையும் உம்ராவையும் முடித்து, மக்காவை விட்டும் செல்லும்வரை ஆடு அறுத்து குர்பானி கொடுக்காமலோ அல்லது எளியவர்களுக்கு உணவளிக்காமலோ அல்லது நோன்பு நோற்காமலோ (தன் தாயகம்) சென்றவருக்குரிய சட்டம் என்ன?

**பதில்:** சங்கைக்குரிய மக்காவில் கிரானான முறையில் ஹஜ்ஜை நிறைவேற்றியதற்காக உழ்ஹியா (குர்பானி) கொடுப்பதற்கு தகுதியுள்ள ஓர் ஆட்டை குற்றப் பரிகாரமாக அவரோ அல்லது அவரால் பொறுப்புச் சாட்டப்படும் நம்பிக்கைக்குரிய ஒருவரோ அறுத்து மக்காவிலுள்ள ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும். அந்த இறைச்சியை அவரும் சாப்பிட்டு தான் விரும்பியவருக்கும் நன்கொடையாகக் கொடுக்கலாம். ஆடு கொடுப்பதற்கு வசதி இல்லையென்றால் பத்து நோன்பு நோற்க வேண்டும்.
(மார்க்கத் தீர்ப்பு மற்றும் அறிவுப்பூர்வமான ஆராய்ச்சிகளுக்குரிய நிரந்தரக்குழு)

15- **கேள்வி:** மக்காவில் வசிக்காத சவூதியின் வேறு நகரங்களில் வசிக்கக்கூடிய ஒருவர் (ஹஜ் செய்து) தவா∴புல் இ∴பாலாவையும் விதாவையும் தவிர மற்ற ஹஜ்ஜுடைய அர்கானுகள் (கடமைகள்) மற்றும் வாஜிபாத்துகளை (அவசியமானவைகளை) முடித்து ஹஜ்ஜுடைய கடைசி நாளாகிய துல்ஹஜ் 12ம் நாள் தவா∴புல் இ∴பாலாவைச் செய்து, இதுவே எனக்கு தவா∴புல் விதாவுக்கும் போதுமென்று தவா∴புல் விதாவைச் செய்யாமல் (தவா∴புல் இ∴பாலா முடிந்த உடனே) தனது வீடு சென்றுவிட்டால் அவர் மீது தவறேதும் உண்டா?

**பதில்:** ஜம்ராக்களுக்கு கல் எறிந்த பின் தவா∴புல் இ∴பாலாவைச் செய்து தவா∴புல் இ∴பாலா முடிந்த உடனேயே மக்காவிலிருந்து பிரயாணத்தை ஆரம்பித்தால் இந்தத் தவா∴பு, தவா∴புல் இ∴பாலாவுக்கும், விதாவுக்கும் போதுமானதே,(எனவே அவர்மீது தவறேதுமில்லை)
(மார்க்கத் தீர்ப்பு மற்றும் அறிவுப்பூர்வமான ஆராய்ச்சிகளுக்குரிய நிரந்தரக்குழு)

16- **கேள்வி:** இ∴ப்ராதான முறையில் ஹஜ் செய்கின்ற நான், அர∴பாவுடைய நாளுக்கு முன் தவா∴புல் குதூமையும் ஸ∴யையும் செய்துவிட்டேன். தவா∴புல் இ∴பாலாச் செய்யும்போது (மீண்டும்) நான் ஸ∴யி செய்வது அவசியமா?

**பதில்:** இ∴ப்ராதான முறையில் ஹஜ்ஜு செய்கின்றவரும், ஹஜ்ஜையும் உம்ராவையும் ஒரே நிய்யத்தில் கிரானான முறையில் நிறைவேற்றக்கூடிய அனைவரும் மக்கா வந்தபின் தவா∴புல் குதூமையும் ஸ∴யையும் நிறைவேற்றி, அவர்கள் இ∴ப்ராத் மற்றும் கிரானான முறையில் ஹஜ்ஜு செய்வதினால் இஹ்ராமைக் களையாமல் இஹ்ராமுடனேயே இருந்தால், அவர்களுக்கு இந்த ஒரு ஸ∴யே (ஹஜ்ஜுக்குப்) போதுமானதாகும். மீண்டும் ஒரு ஸ∴யி செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை.

இ∴ப்ராதான முறையில் ஹஜ்ஜு செய்பவரும் அவ்வாறே குர்பானியை தன்னுடன் கொண்டு வந்து, கிரானான முறையில் ஹஜ்ஜையும் உம்ராவையும் ஒரே நிய்யத்தில் செய்பவரும் துல்ஹஜ் பிறை பத்தாம் நாள்வரை தன் இஹ்ராமிலிருந்து விடுபடாமல் இருந்தால், இவ்விருவருக்கும் முதல் (தவா∴புல் குதூமுடன்) செய்த ஸ∴யியே போதுமானதாகும்.

கிரானான அல்லது இ∴ப்ராதான முறையில் ஹஜ்ஜு செய்பவர்கள் அர∴பாவை முடித்து பெருநாள் தினத்தன்று தங்கள் இஹ்ராமைக் களைந்திருந்தால், அவர்கள் முதலில் (தவா∴புல் குதூமுடன்) செய்த ஸ∴யே போதுமானதாகும். இரண்டாவது முறை (தவா∴புல் இ∴பாலாவுடன்) ஸ∴யி செய்யத் தேவையில்லை. அவர்கள் குர்பானியை தங்களுடன் கொண்டு வந்திருந்தாலும் கொண்டு வராவிட்டாலும் சரியே!

யார் தமத்துஆன முறையில் ஹஜ்ஜு செய்வதற்கு வந்து (முதலில்) உம்ராவிற்கான தவா∴பையும் ஸ∴யையும் செய்து, இஹ்ராமிலிருந்து விடுபட்டு பின்பு ஹஜ்ஜிற்காக நிய்யத்து வைத்து ஹஜ்ஜையும் நிறைவேற்றுகின்றாரோ அவர்தான் (தவா∴புல் இ∴பாலாவுடன்) மீண்டும் ஒரு முறை ஸ∴யி செய்யவேண்டும்.
(மார்க்கத் தீர்ப்பு மற்றும் அறிவுப்பூர்வமான ஆராய்ச்சிகளுக்குரிய நிரந்தரக்குழு)

17- **கேள்வி:** உம்ரா மற்றும் ஹஜ்ஜுடைய எண்ணமில்லாமல் மக்கா வருபவர்களுக்குரிய சட்டம் என்ன?

**பதில்:** யாரெல்லாம் ஹஜ் உம்ராவுடைய நோக்கமின்றி வியாபாரி, உத்தியோகஸ்தர், தபால் வினியோகம் செய்பவர், வாகனம் ஓட்டுபவர் இன்னும் இவர்கள் அல்லாத மற்ற வேலைகள் செய்வதற்காக மக்கா செல்கிறார்களோ, அவர்களுக்கு ஹஜ் உம்ராச் செய்யவேண்டுமென்ற எண்ணம் இருந்தாலே தவிர இஹ்ராமிற்காக நிய்யத்து வைக்கத் தேவையில்லை.

(அந்தந்த எல்லைகள்) அவ்வப்பகுதிகளிலிருந்து ஹஜ் உம்ரா நோக்கத்தோடு வரக்கூடிய மக்களுக்கும் அந்த வழியாக வரக்கூடிய அப்பகுதியில் வசிக்காதவர்களுக்கும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: புகாரி,முஸ்லிம்

ஆகவே, யார் ஹஜ் உம்ரா நோக்கமில்லாமல் மீக்காத்தை கடந்து செல்கின்றாரோ அவர் இஹ்ராமிற்காக நிய்யத்து வைக்கத் தேவையில்லை என்பது இந்த ஹதீஸில் இருந்து விளங்குகின்றது, இது அல்லாஹ் தன் அடியார்களுக்குச் செய்த அருளும் அவர்களுக்கு மார்க்கத்தை இலகுபடுத்திக் கொடுத்ததுமாகும்.
(அப்துல் அஸீஸ் இப்னு பாஸ் அவர்கள் எழுதிய கிதாபுத் தஹ்கீக் வல் ஈலாஹ் என்னும் புத்தகத்திலிருந்து)

18- **கேள்வி:** மாதவிடாயை நிறுத்துவதற்காக அல்லது பிற்படுத்துவதற்காக உபயோகிக்கும் மாத்திரையை ஹஜ்ஜுடைய காலங்களில் பெண்கள் உபயோகிக்கலாமா?

**பதில்:** அதற்குரிய மருத்துவர்களிடம் ஆலோசனை பெற்று, அதனால் அப்பெண்ணின் ஆரோக்கியத்திற்கு ஏதும் ஆபத்துகள் இல்லையென்றால், ஹஜ்ஜுடைய காலங்களில் மாதவிடாய் வராமல் இருப்பதற்கு அம்மாத்திரையை பெண்கள் உபயோகிக்கலாம். மற்றவர்களுடன் சேர்ந்து ரமலான் மாதத்தின் (எல்லா) நோன்புகளையும் நோற்க வேண்டுமென்று விரும்பக்கூடிய பெண்களும் இவ்வாறே அம்மாத்திரையை உபயோகிக்கலாம். (அப்துல் அஸீஸ் இப்னு பாஸ், அல்லாஹ் அவருக்கு அருள்புரிவானாக!)

## ஹஜ் பற்றிய விளக்கங்களுக்கு...

உங்களுடைய ஹஜ் பற்றிய சந்தேகங்களையும், விளக்கங்கயைும் கீழ்கண்ட தொலைபேசியைத் தொடர்பு கொண்டு கேட்டுப் பயனடையுங்கள்.

050 6625229

மௌலவி. இப்றாஹிம் மதனி
(அழைப்பாளர் - ஸனாய்யியா)